# மின்-மிதிவண்டி

## கட்டாய விதிமுறை தேர்வுக்கான அதிகாரப்பூர்வக் கையேடு

Land Transport Authority

SINGAPORE POLICE FORCE
SAFEGUARDING EVERY DAY

SINGAPORE POLYTECHNIC SP

பதிப்பு 1.0 | ஜூன் 2021

# ⚠ பொறுப்புத் துறப்பு

இந்த வெளியீட்டை வெளியீட்டாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதியின்றி, முழுமையாகவோ, பகுதியாகவோ எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மறுபடியும் தயாரிக்கவோ பகிரவோ கூடாது.

**நிலப் போக்குவரத்து ஆணையம்**
1 ஹாம்ப்ஷயர் சாலை
சிங்கப்பூர் 219428
நேரடித் தொலைபேசி எண்: 1800 2255 582

**நிலப் போக்குவரத்து ஆணையத்தால் இணையத்தில் வெளியிடப்பட்டது**

**கடைசியாக 14 ஜூன் 2021 அன்று புதுப்பிக்கப்பட்டது. இந்தக் கையேட்டில் உள்ள தகவல்கள், வெளியிடப்படும் நேரத்தில் துல்லியமானவை.**

# உள்ளடக்கம்


**அறிமுகம்** — 5

**பயிற்சி நிரல் 1: சிங்கப்பூரில் உள்ள உந்து நடமாட்டச் சாதனங்கள் பற்றிய பொதுவான தகவல்கள்** — 6

1.1 அறிமுகம் ---- 8
1.1.1 உந்து நடமாட்டச் சாதனங்களின் வகைகள் ---- 8
1.2 தனிநபர் நடமாட்டச் சாதனங்கள் (PMDகள்) ---- 9
1.2.1 தனிநபர் நடமாட்டச் சாதனங்களின் (PMDகள்) வகைகள் ---- 9
1.2.2 மின்-ஸ்கூட்டர்கள் ---- 10
1.3 மிதிவண்டிகள் ---- 11
1.3.1 மோட்டார் பொருத்தப்படாத மிதிவண்டிகள் ---- 11
1.3.2 மின்-மிதிவண்டிகள் (PABகள்) ---- 12
1.4 தனிநபர் நடமாட்ட உதவிச் சாதனங்கள் (PMAகள்) ---- 13
1.5 பாதைகளின் வகைகள் ---- 15
1.6 ஓட்டுவதற்குத் தயாராகுதல் ---- 16
1.7 பொதுப் பாதைகளில் ஓட்டுவதற்கான வழிகாட்டுதல்கள் ---- 17
1.8 சாலைகளில் ஓட்டுவதற்கான வழிகாட்டுதல்கள் ---- 18

**பயிற்சி நிரல் 2: மின்-மிதிவண்டி (PAB) ஓட்டிகள் பயணத்திற்கு முன் செய்ய வேண்டியவையும் பாகங்களைச் சரிபார்ப்பதும்** — 19

2.1 மின்-மிதிவண்டிகளுக்கான வரையறைகள் ---- 21
2.2 சாதனத் தரநிலைகள் (EN15194) மற்றும் தீப் பாதுகாப்பு ---- 24
2.3 மின்-மிதிவண்டியின் பராமரிப்பு ---- 26
2.4 ஓட்டுவதற்கு முன்னர் மின்-மிதிவண்டியின் பாகங்களைச் சரிபார்த்தல் ---- 26
2.5 பாதுகாப்புக் கவசங்கள் மற்றும் ஆடை ---- 30
2.6 சாதனத்தை நிறுத்தி வைத்தல், பாதுகாத்தல் மற்றும் பத்திரப்படுத்துதல் ---- 31
2.7 உங்கள் பயணத்தைத் திட்டமிடுதல் ---- 32
2.8 மூன்றாம் தரப்புப் பொறுப்பு காப்புறுதி ---- 33

**பயிற்சி நிரல் 3: மின்-மிதிவண்டிகளைப் (PAB) பயன்படுத்துவதற்கான விதிகளும் நடத்தை ஒழுங்குமுறைகளும் —— 34**

3.1 மின்-மிதிவண்டியைக் கையாளும் திறன்கள் ------ 37
3.1.1 தொடங்குதல் மற்றும் நிறுத்துதல் ------ 37
3.1.2 ஒரே நேர்க்கோட்டில் ஓட்டுதல் ------ 37
3.1.3 கை சைகைகள் ------ 37
3.1.4 இடதுபுறம் அல்லது வலதுபுறம் திரும்புதல் ------ 38
3.1.5 குறைவான வேகத்தில் ஓட்டுதல் ------ 38
3.1.6 ஏற்றமான மற்றும் இறக்கமான பாதைகளில் ஓட்டுதல் ------ 38
3.2 பாதை வகைகள், குறியீடுகள் மற்றும் பாதை உள்கட்டமைப்பு வகைகள் ------ 39
3.2.1 நடைபாதைகள் மற்றும் மிதிவண்டி பாதைகளை அடையாளம் காணுதல் ------ 39
3.2.2 சிறப்பு வட்டாரங்கள் ------ 41
3.2.3 பாதைக் குறியீடுகள் மற்றும் குறியடையாளங்கள் ------ 43
3.2.4 சாலைக் கடப்புகளின் வகைகள் ------ 47
3.2.5 சாலைப் போக்குவரத்துக் குறியீடுகள் ------ 51
3.2.6 சாலையில் குறிக்கப்பட்டிருக்கும் குறியீடுகள் ------ 65
3.2.7 சாலையில் பயணிக்கும் கண்ணோட்டத்தில் இருந்து சாலைக் கடப்புகளை நோக்குவது ------ 68
3.3 மின்-மிதிவண்டிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் -- 70
3.3.1 நீங்கள் மின்-மிதிவண்டி ஓட்டலாமா? ------ 70
3.3.2 மின்-மிதிவண்டியை நீங்கள் எங்கு ஓட்டலாம்? ------ 70
3.3.3 சாலைக்கு அப்பால் ஓட்டுவது தொடர்பான பிற ஒழுங்குமுறைகள்-- 71
3.3.4 சாலையில் ஓட்டுவது தொடர்பான பிற ஒழுங்குமுறைகள்----- 72
3.3.5 பாதைகள், சாலைகள் இரண்டிலும் ஓட்டுவது தொடர்பான பிற ஒழுங்குமுறைகள் ------ 75
3.4 சாலைக்கு அப்பாலுள்ள சூழல்களைக் கடப்பது ------ 76
3.5 சாலையிலுள்ள சூழல்களைக் கடப்பது ------ 78
3.6 சிறந்த நடைமுறைகள் மற்றும் நடத்தை விதிகள் - மிதிவண்டி பாதைகள் மற்றும் சாலைகளில் மின்-மிதிவண்டியை ஓட்டுதல் ------ 90
3.7 உத்தேச ஆபத்துகளை அடையாளம் காணுதல் ------ 92
3.8 விபத்து நிகழும் போது என்ன செய்ய வேண்டும் ------ 93

**பின்னிணைப்பு A —— 95**

# அறிமுகம்

மின்-மிதிவண்டிகளைப் (PAB-கள்) பயன்படுத்துபவர்கள் அவற்றைப் பாதைகள் மற்றும் சாலைகளில் பாதுகாப்பாகவும் பொறுப்பான முறையிலும் ஓட்டுவதற்குத் தேவையான தகவல்களை இந்தக் கையேடு வழங்குகிறது. பாதுகாப்பு வழிகாட்டுதல்களை அறிந்துகொள்வதும் பயன்படுத்துவதும் விபத்துகளைக் குறைக்கவும், கனிவான உந்து நடமாட்டக் கலாசாரத்தை வளர்க்கவும் உதவும். மேலும், விதிகளைக் கடைப்பிடிக்காத பயனர்கள் சட்டப்படியான நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

இந்தக் கையேடு பின்வரும் பயிற்சி நிரல்களை உள்ளடக்கியிருக்கும்:

**பயிற்சி நிரல் 1** — சிங்கப்பூரில் உள்ள உந்து நடமாட்டச் சாதனங்கள் பற்றிய பொதுவான தகவல்கள்

**பயிற்சி நிரல் 2** — மின்- மிதிவண்டி ஓட்டிகள் பயணத்திற்கு முன் செய்ய வேண்டியவையும் பாகங்களைச் சரிபார்ப்பதும்

**பயிற்சி நிரல் 3** — மின்- மிதிவண்டியைப் பயன்படுத்துவதற்கான விதிகளும் நடத்தை ஒழுங்குமுறைகளும்

## பயிற்சி நிரல் 1

# சிங்கப்பூரில் உள்ள உந்து நடமாட்டச் சாதனங்கள் பற்றிய பொதுவான தகவல்கள்

# கற்றல் விளைவுகள்

1. **நான்கு** உந்து நடமாட்டச் சாதனங்களை அடையாளம் காண முடியவேண்டும்.
2. ஒவ்வொரு சாதனத்தையும் ஓட்டக்கூடிய பாதைகளின் வகைகளைப் பட்டியலிட முடியவேண்டும்
3. பொதுப் பாதைகளில் ஓட்டுவதற்கான வழிகாட்டுதல்களில் **குறைந்தது ஐந்தைப்** பட்டியலிட முடியவேண்டும்.
4. சாலைகளில் ஓட்டுவதற்கான வழிகாட்டுதல்களில் குறைந்தது ஐந்தைப் பட்டியலிட முடியவேண்டும்.

# தலைப்புகள்


**1.1** அறிமுகம்

**1.2** தனிநபர் நடமாட்டச் சாதனங்கள் (PMDகள்)

**1.3** மிதிவண்டிகள்

**1.4** தனிநபர் நடமாட்ட உதவிச் சாதனங்கள் (PMAகள்)

**1.5** பாதைகளின் வகைகள்

**1.6** ஓட்டுவதற்குத் தயாராகுதல்

**1.7** பொதுப் பாதைகளில் ஓட்டுவதற்கான வழிகாட்டுதல்கள்

**1.8** சாலைகளில் ஓட்டுவதற்கான வழிகாட்டுதல்கள்

## 1.1 அறிமுகம்

இந்தப் பயிற்சி நிரல், பல்வேறு வகையான உந்து நடமாட்டச் சாதனங்களை அறிமுகப்படுத்துகிறது. அதோடு, உந்து நடமாட்டச் சாதனங்களின் பயன்பாடு, உரிமைத்துவம் தொடர்பான விதிகள், உந்து நடமாட்டம் குறித்த நடத்தை ஒழுங்குமுறைகள், பாதுகாப்பாக சாதனத்தை ஓட்டுவதற்கான உதவிக்குறிப்புகள் ஆகியன குறித்த மேலோட்டமான தகவலையும் வழங்குகிறது.

### 1.1.1 உந்து நடமாட்டச் சாதனங்களின் வகைகள்

உந்து நடமாட்டச் சாதனங்களைப் பின்வரும் பிரிவுகளில் வகைப்படுத்தலாம்:

a) தனிநபர் நடமாட்டச் சாதனங்கள் (PMDகள்)

- மோட்டார் பொருத்தப்பட்ட PMDகள்: மின்சார ஸ்கூட்டர்கள் (மின்-ஸ்கூட்டர்கள்),
- ஹோவர்போர்டுகள் போன்றவை.
  - மோட்டார் பொருத்தப்படாத PMD-கள்: கிக்-ஸ்கூட்டர்கள், ஸ்கேட்போர்டுகள் போன்றவை



b) மிதிவண்டிகள்

- பெடல் மிதிவண்டிகள்
- மின்-மிதிவண்டிகள் (PAB)



c) தனிநபர் நடமாட்ட உதவிச் சாதனங்கள் (PMAகள்)





# 1.2 தனிநபர் நடமாட்டச் சாதனங்கள் (PMDகள்)

இந்த சாதனங்களின் பிரிவுவகை மக்கள் பயணம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட சக்கரங்களைக் கொண்ட வாகன வகைகளை உள்ளடக்குகிறது. அவை மின்சார மோட்டார், மனித ஆற்றல் அல்லது இவை இரண்டாலும் செலுத்தப்படலாம். இதில் தனிநபர் நடமாட்ட உதவிச் சாதனங்கள், மிதிவண்டிகள், இன்லைன் ஸ்கேட் அல்லது ரோலர்-ஸ்கேட் உள்ளடங்காது.

அனைத்து PMD-களையும் மிதிவண்டி பாதைகளில் ஓட்டலாம். ஆனால் மோட்டார் பொருத்தப்படாத PMD-களை மட்டுமே நடைபாதையில் ஓட்ட முடியும். அனைத்து PMD-களையும் சாலைகளில் ஓட்ட முடியாது.

## 1.2.1 தனிநபர் நடமாட்டச் சாதனங்களின் (PMDகள்) வகைகள்

ஹோவர்போர்டுகள், யூனிசைக்கிள்கள், மோட்டார் பொருத்தப்பட்ட ஸ்கேட்போர்டுகள் ஆகியன மோட்டார் பொருத்தப்பட்ட PMD வகைகளுக்கான எடுத்துக்காட்டுகளில் உள்ளடங்கும்.


ஹோவர்போர்டு


யூனிசைக்கிள்


மோட்டார் பொருத்தப்பட்ட ஸ்கேட்போர்டு


மற்றவை

ஸ்கேட்போர்டுகள், கிக்-ஸ்கூட்டர்கள் ஆகியன மோட்டார் பொருத்தப்படாத PMD-களுக்கான எடுத்துக்காட்டுகளில் உள்ளடங்கும்.


ஸ்கேட்போர்டு


கிக் ஸ்கூட்டர்

## 1.2.2 மின்-ஸ்கூட்டர்கள்

**மின்-ஸ்கூட்டர்கள்** என்பவை கைப்பிடிகள் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட PMD-களாகும். உரிமையாளர்கள் பின்வரும் தகவல்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்:

a) மின்-ஸ்கூட்டர்கள் கண்டிப்பாக LTA-உடன் (நிலப் போக்குவரத்து ஆணையத்துடன்) பதிவு செய்யப்பட வேண்டும்.



b) மின்-ஸ்கூட்டர்களின் சாதன இணக்க உட்படுதலை உறுதி செய்ய, ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட சோதனை நிலையங்களால் சோதிக்கப்பட வேண்டும்.

c) மின்-ஸ்கூட்டர்களில் பதிவு முத்திரையும், அடையாள முத்திரையும் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். பதிவு முத்திரை என்பது LTA-இன் சின்னமும் பதிவு எண்ணும் பதிக்கப்பெற்று, சோதனை நிலையத்தால் வழங்கப்படும் ஒட்டுவில்லை ஆகும்.

d) மின்-ஸ்கூட்டரை ஓட்ட உங்களுக்கு மின்-ஸ்கூட்டருக்கான எழுத்துப்பூர்வத் தேர்வுச் சான்றிதழ் தேவை*.

e) மின்-ஸ்கூட்டர்களை மிதிவண்டி பாதைகளில் மட்டுமே ஓட்டலாம்.

f) மின்-ஸ்கூட்டர்கள் உட்பட அனைத்து மோட்டார் பொருத்தப்பட்ட PMD-களுக்கும், UL2272 தீப் பாதுகாப்புத் தரநிலைச் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும். தீ விபத்துகளின் அபாயத்தைக் குறைக்க, சரியான மற்றும் பாதுகாப்பான கையாளும் முறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

g) மின்-ஸ்கூட்டரை ஓட்டுவதற்கான குறைந்தபட்ச வயது 16 ஆகும். மின்-ஸ்கூட்டருக்கான எழுத்துப்பூர்வத் தேர்வு சான்றிதழைப் பெற்ற வயதுவந்தோரின் (குறைந்தது 21 வயது) மேற்பார்வையின் கீழ், சட்டப்படி அனுமதிக்கப்பட்ட வயதிற்குக் குறைவானவர்கள் இவற்றை ஓட்டலாம்*.

---

* எழுத்துப்பூர்வத் தேர்வு அமலாக்கப்பட்டவுடன் மட்டுமே பொருந்தும்.

# 1.3 மிதிவண்டிகள்

பைக் அல்லது சைக்கிள் என்றும் அழைக்கப்படுகின்ற **மிதிவண்டி**, மனிதனால் இயங்குகின்ற அல்லது மோட்டார் மூலம் இயங்குகின்ற, பெடலைக் கொண்டு செலுத்தப்படும் ஒரு வாகனமாகும். இதில் முன்புறமும் பின்புறமும் ஒரு சட்டத்தில் இரண்டு சக்கரங்கள் இணைக்கப்பட்டிருக்கும்.

## 1.3.1 மோட்டார் பொருத்தப்படாத மிதிவண்டிகள்

மோட்டார் பொருத்தப்படாத மிதிவண்டிகளின் வகைகள்:

a) சாலைக்கான மிதிவண்டிகள்
b) மலைப் பிரதேசத்திற்கான மிதிவண்டிகள்
c) தட மிதிவண்டிகள் / நிலையான கியர் மிதிவண்டிகள்
d) ஹைப்ரிட் மிதிவண்டிகள்
e) மடக்கக்கூடிய மிதிவண்டிகள்










## 1.3.2 மின்-மிதிவண்டிகள் (PAB-கள்)

பொதுவாக **இ-பைக்** என்று அழைக்கப்படும் **மின்-மிதிவண்டி** (PAB), வழக்கமான மிதிவண்டி போலவே தோற்றமளிக்கும். ஆனால் இதில் பெடலிங் செய்ய உதவுவதற்கு மின்சார மோட்டார் பொருத்தப்பட்டிருக்கும்.



### PABகள் பற்றிய முக்கியத் தகவல்கள்



a) PAB-களைப் பயன்படுத்துவதற்கு முன், LTA அங்கீகரித்த அதிகாரபூர்வ சோதனை நிலையத்தில் வகை அங்கீகரிக்கப்பட்டு, சீல் வைக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட வேண்டும்.




b) PAB-களின் பின்புறத்தில் தெளிவாகக் காணக்கூடிய எண் தகடு பொருத்தப்பட்டு இருக்க வேண்டும்.

c) PAB-ஐ ஓட்டுவதற்கு உங்களுக்கு PAB எழுத்துப்பூர்வத் தேர்வுச் சான்றிதழ் தேவை*.

d) PAB-களை மிதிவண்டி பாதைகளிலும் சாலைகளிலும் ஓட்டலாம்.




e) PAB-ஐ ஓட்டுவதற்கான குறைந்தபட்ச வயது 16 ஆகும்; PAB-களின் பின்னிருக்கையில் பயணம் செய்யும் பயணிகளுக்கும் அதே வயது வரம்பு பொருந்தும்.

---

* எழுத்துப்பூர்வத் தேர்வு அமலாக்கப்பட்டவுடன் மட்டுமே பொருந்தும்.

## 1.4 தனிநபர் நடமாட்ட உதவிச் சாதனங்கள் (PMAகள்)

**தனிநபர் நடமாட்ட உதவிச் சாதனங்களில்** (PMA) சக்கர நாற்காலிகள், மோட்டார் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள் அல்லது மொபிலிட்டி ஸ்கூட்டர்கள் ஆகியவை அடங்கும். நடக்க முடியாத அல்லது நடக்கச் சிரமப்படும் ஒருவரைச் சுமக்கும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. PMA-களை மிதிவண்டி பாதைகளிலும் நடைபாதைகளிலும் ஓட்டலாம்.









| | உந்து நடமாட்டச் சாதனங்களின் வகைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **விதிகள்** | **PMD -** மின்-ஸ்கூட்டர் | **PMD -** மோட்டார் பொருத்தப்பட்டது (மின்-யூனிசைக்கிள், ஹோவர்போர்டு, மோட்டார் பொருத்தப்பட்ட ஸ்கேட்போர்டு) | **PMD -** மோட்டார் பொருத்தப்படாதவை (யூனிசைக்கிள், ஸ்கேட்போர்டு, கிக்-ஸ்கூட்டர்) | மிதிவண்டி | **PAB** | **PMA** |
| **LTA உடன் பதிவு செய்ய வேண்டுமா?** | ஆம் | இல்லை | இல்லை | இல்லை | ஆம் | இல்லை |
| எங்கு ஓட்ட வேண்டும்? **மிதிவண்டி பாதை** | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| **நடைபாதை** | ஆம் | இல்லை | ஆம் | ஆம் | இல்லை | ஆம் |
| **சாலை** | இல்லை | இல்லை | இல்லை | ஆம் | ஆம் | இல்லை |
| **சாதனங்களுக்கான தகுதி வரையறைகள்** | பாரம் ஏற்றப்படாத நிலையில் அதிகபட்ச எடை - 20 கிலோ | | | பாரம் ஏற்றப்படாத நிலையில் அதிகபட்ச எடை - 20 கிலோ (பாதைகளில்) | | |
| | அதிகபட்ச அகலம் 70 செ.மீ. | | | அதிகபட்ச அகலம் 70 செ.மீ (பாதைகளில்) | | |
| | UL2272 தீப் பாதுகாப்புத் தரநிலைச் சான்றளிக்கப்பட்டது | | | | EN15194 இணக்கம் | |
| | அதிகபட்ச வேகம் மணிக்கு 25 கிமீ | | | | மோட்டார் உதவி மணிக்கு 25 கிமீ வேகத்தில் துண்டிக்கப்பட வேண்டும் | மோட்டார் பொருத்தப்பட்ட PMA-களுக்கான அதிகபட்ச வேகம் மணிக்கு 10 கி.மீ |
| **குறைந்தபட்ச வயது** | 16 வயது <16 வயதினர், மின்-ஸ்கூட்டர் எழுத்துப்பூர்வத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஒரு யதுவந்தவரால் மேற்பார்வையிடப்பட வேண்டும் | 16 வயது | இல்லை | இல்லை | 16 வயது ஓட்டுபவர்: 16 வயது பின்னிருக்கை பயணி: 16 வயது | இல்லை |
| **எழுத்துப்பூர்வத் தேர்வு அவசியமா?** | ஆம்* | இல்லை | இல்லை | இல்லை | ஆம்* | இல்லை |

* எழுத்துப்பூர்வத் தேர்வு அமலாக்கப்பட்டவுடன் மட்டுமே பொருந்தும்.

கீழேயுள்ள விளக்கப்படம், **பாதைகள் மற்றும் சாலைகளின் வகைகளையும், அவற்றில் செல்ல அனுமதிக்கப்பட்ட சாதனங்களின் வகைகளையும் சுருக்கமாகக் காட்டுகிறது.**

| பாதை/ சாலை — சாதன வகை | **நடைபாதை** பொதுவாக சாலைகளுக்கு அருகிலும் வீவக குடியிருப்பு நகரங்களிலும் இருக்கும் பாதைகள் மற்றும் வீவக குடியிருப்புப்பேட்டைகளுக்குள் உள்ள | **மிதிவண்டி பாதை** "மிதிவண்டி ஓட்டுநர்" அல்லது 'PCN' குறிக்கப்பட்ட பாதைகள் | **சாலை** விரைவுச்சாலைகள் மற்றும் சுரங்கச்சாலைகள் தவிர்த்து |
|---|---|---|---|
| |  |  |  |
| மிதிவண்டி | ✓ | ✓ | ✓ |
| மின்-மிதிவண்டி (PAB) | ✗ | ✓ | ✓ |
| மோட்டார் பொருத்தப்படாத தனிநபர் நடமாட்டச் சாதனம் (PMD) எ.கா. கையால் இயக்கும் கிக் ஸ்கூட்டர் | ✗ | ✓ | ✗ |
| மோட்டார் பொருத்தப்படாத தனிநபர் நடமாட்டச் சாதனம் (PMD) எ.கா. கையால் இயக்கும் கிக் ஸ்கூட்டர் | ✓ | ✓ | ✗ |
| தனிநபர் நடமாட்ட உதவிச் சாதனம் (PMA) எ.கா. மொபிலிட்டி ஸ்கூட்டர் அல்லது மின்சாரத்தில் இயங்கும் சக்கர நாற்காலி | ✓ | ✓ | ✗ |

## 1.5 பாதைகளின் வகைகள்

a) **மிதிவண்டி பாதைகளில்** அடையாளக் குறிகள் இருக்கும். இந்தப் பாதைகள் மணிக்கு 25 கிமீ வேக வரம்பைக் கொண்டுள்ளன. அனைத்து வகையான உந்து நடமாட்டச் சாதனங்களையும் இந்தப் பாதையில் பயன்படுத்தலாம்.



b) **நடைபாதைகளில்** 'மிதிவண்டி ஓட்டுநர்' அல்லது 'PCN' அடையாளக் குறிகள் எதுவும் இருக்காது. நடைபாதைகளுக்கான வேக வரம்பு மணிக்கு 10 கி.மீ. மோட்டார் பொருத்தப்படாத சாதனங்களையும் PMA-களையும் நடைபாதைகளில் பயன்படுத்தலாம்.



## 1.6 ஓட்டுவதற்குத் தயாராகுதல்

a) மற்ற வாகன ஓட்டிகள், பாதசாரிகள் ஆகியோரின் பார்வையில் நீங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் பிரகாசமான வண்ண ஆடைகளை அணியுங்கள்.

b) புறப்படுவதற்கு முன்னர் உங்கள் சாதனத்தின் விளக்குகள், பிரேக்குகள் மற்றும் டயர்கள் நல்ல நிலையில் உள்ளதா என்பதைச் சரிபாருங்கள்.

c) சாதனம் உங்களுக்கு வசதியாகவும், முழுமையாக உங்கள் கட்டுப்பாட்டிலும் இருக்கிறதா என்பதைச் சரிபாருங்கள். புறப்படுவதற்கு முன்னர் உங்கள் இருக்கை அல்லது கைப்பிடிகளைச் சரி செய்யுங்கள்.

d) எல்லா பாரங்களும் துணைக்கருவிகளும் முறையாகப் பிணைக்கப்பட்டுள்ளனவா என்றும், அவை சாதனத்தைக் கட்டுப்படுத்தும் உங்கள் திறனைப் பாதிக்காமல் இருப்பதையும் சரிபாருங்கள்.

e) உங்கள் பயணத்திற்குத் முன்கூட்டியே திட்டமிட்டு, ஆகப் பாதுகாப்பான பாதையைத் தேர்ந்தெடுங்கள். முடிந்தவரை மிதிவண்டி பாதைகள் அதிகமாகவுள்ள பாதையைத் தேர்ந்தெடுங்கள். சாலைகளில் மிதிவண்டியும் மின்-மிதிவண்டியும் ஓட்டிச்செல்லும் போது, உங்கள் பாதுகாப்பிற்காக போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்திடுங்கள்.



## 1.7 பொதுப் பாதைகளில் ஓட்டுவதற்கான வழிகாட்டுதல்கள்

அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க மற்ற பயனர்களைக் கனிவோடு கருதுங்கள். பாதைகளில் ஓட்டும்போது, கூடுதல் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய பாதசாரிகள் போன்ற பயனர்களுக்கு எப்போதும் வழிவிடுங்கள். பொதுப் பாதைகளில் ஓட்டும்போது ஓட்டுபவர்கள் பின்வரும் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள்:

a) எப்பொழுதும் பாதசாரிகளுக்கு வழிவிடுங்கள்.

b) உங்கள் வேகத்தைக் கண்காணித்து மற்றவர்களைச் சுற்றி மெதுவாகச் செல்லுங்கள்.

c) பேருந்து நிறுத்தங்கள் மற்றும்/அல்லது பொதுப் பாதைகளின் குறுக்குச் சந்திப்புகளை நெருங்கும்போது வேகத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

d) நெரிசலான இடங்களில் உங்கள் சாதனத்தில் இருந்து இறங்கி அதை தள்ளிக் கொண்டுச் செல்லுங்கள்.

e) முந்திச் செல்வதற்கு முன்னர் மற்றவர்களை மெல்ல எச்சரியுங்கள்.

f) முந்திச் செல்லும் போது தவிர மற்ற நேரங்களில் பாதையில் இடதுபுறமாகவே செல்லுங்கள்.

g) குறிப்பாக, முந்திச் செல்லும் போது மோதல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, பாதையைப் பயன்படுத்தும் பிறரிடமிருந்து பாதுகாப்பான தூர இடைவெளியைக் கடைப்பிடியுங்கள்.

h) பிற பாதைப் பயனர்களின் முகத்திற்கு நேராக உங்கள் விளக்குகள் ஒளிபாய்ச்சுவதைத் தவிர்த்திடுங்கள்.

i) இரு கைகளையும் கைப்பிடிகள்மீது வைத்திருங்கள். செல்லும் திசையை மாற்றுவதற்கு அல்லது திரும்புவதற்கான உங்கள் நோக்கத்தை முன்னதாகவே சைகை மூலம் தெரிவியுங்கள்.

j) மிதிவண்டி பாதைகளும், மிதிவண்டி கடப்புகளும் இருக்கும் போது அவற்றில் ஓட்டிச் செல்லுங்கள்.

k) மிதிவண்டி நிலையடுக்குகள் மற்றும் மஞ்சள் நிறப் பெட்டிகள் போன்ற குறிப்பிட்ட நிறுத்துமிடங்களில் உங்கள் சாதனத்தை நிறுத்தி வையுங்கள்.

# 1.8 சாலைகளில் ஓட்டுவதற்கான வழிகாட்டுதல்கள்




சாலைப் பாதுகாப்பு என்பது பகிர்ந்துகொள்ளப்படும் பொறுப்பாகும். மிதிவண்டி மற்றும் PAB-ஐ ஓட்டுபவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி தங்களைப் பாதுகாத்துக் கொள்வதோடு சாலைகளை வாகன ஓட்டிகளுடன் பாதுகாப்பாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

a) நடைமுறைக்கு ஏற்றவாறு எப்பொழுதும் சாலைகளின் இடதுபுற விளிம்பிற்கு அருகாமையில் சாதனத்தை ஓட்டிச் செல்லுங்கள். மேலும் மற்ற வாகனங்கள் உங்களைப் பத்திரமாக முந்திச் செல்ல வழிவிடுங்கள். நேராக ஓட்டிச் செல்லுங்கள், வளைந்து நெளிந்து செல்லாதீர்கள். அதோடு, திடீரென்று தடம் மாறுவதைத் தவிர்த்திடுங்கள்.

b) அனைத்துப் போக்குவரத்து சமிக்ஞைகளுக்கும் கீழ்ப்படிந்து, போக்குவரத்தின் அதே திசையில் ஓட்டிச் செல்லுங்கள்.

c) மிதிவண்டி வழித்தடங்கள் இருந்தால் எப்போதும் அவற்றையே பயன்படுத்துங்கள்.

d) முன்னால் செல்லும் வாகனங்களுக்கும் உங்களுக்கும் இடையே ஒரு பாதுகாப்பான தூரத்தைக் கடைப்பிடியுங்கள். சாதனத்தை ஓட்டும் போது போக்குவரத்து குறித்த விழிப்புணர்வைப் பேணுங்கள்.

e) பேருந்து நிறுத்தத்தில் சாலை ஓரக்கல்லுக்கும் நின்று கொண்டிருக்கும் பேருந்துக்கும் இடையில், அல்லது திரும்புகின்ற வாகனத்திற்கும் ஓரக்கல்லுக்கும் இடையில் செல்லாதீர்கள்.

f) வளைவுகள், சாலை சந்திப்புகள், பேருந்து நிறுத்தங்கள், பாதசாரிகள் கடந்து செல்லும் இடங்கள் ஆகியவற்றை அணுகும் போது அல்லது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு காரைக் கடக்கும் போது, வேகத்தைக் குறைத்து, மற்ற சாலைப் பயனர்கள் உள்ளனரா என்பதைக் கவனியுங்கள்.

g) மேடான சாலை மிகவும் செங்குத்தானதாக இருந்தால், சாதனத்தில் இருந்து இறங்கி தள்ளிக்கொண்டு நடந்து செல்லுங்கள். மேட்டிலிருந்து இறங்கும் போது உங்கள் வேகத்தைக் கட்டுப்படுத்துங்கள்.

## பயிற்சி நிரல் 2

# மின்-மிதிவண்டி (PAB) ஓட்டிகள் பயணத்திற்கு முன் செய்ய வேண்டியவையும் பாகங்களைச் சரிபார்ப்பதும்

# கற்றல் விளைவுகள்

1. **மின்-மிதிவண்டிகளுக்கான வரையறைகளைப் பட்டியலிட முடியவேண்டும்.**
2. சாதன வரையறைகளுக்கான **பாதுகாப்புக் காரணங்களை** விளக்க முடியவேண்டும்.
3. சாதனம் தீப்பற்றுவதைத் தடுப்பதற்கான **குறைந்தது 4 வழிகாட்டுதல்களைப்** பட்டியலிட முடியவேண்டும்.
4. மின்-மிதிவண்டியை ஓட்டுவதற்குமுன் மேற்கொள்ள வேண்டிய **குறைந்தது 3 சரிபார்ப்புகளை** விவரிக்க முடியவேண்டும்.
5. மின்-மிதிவண்டியைப் பயன்படுத்தி உங்கள் பயணத்தைத் திட்டமிடுவதற்கான திறனைப் பெற்றிருக்க வேண்டும்.

# தலைப்புகள்

**2.1** மின்-மிதிவண்டிகளுக்கான வரையறைகள்

**2.2** சாதனத் தரநிலைகள் (EN15194) மற்றும் தீப் பாதுகாப்பு

**2.3** மின்-மிதிவண்டியின் பராமரிப்பு

**2.4** ஓட்டுவதற்கு முன்னர் மின்-மிதிவண்டியின் பாகங்களைச் சரிபார்த்தல்

**2.5** பாதுகாப்புக் கவசங்கள் மற்றும் ஆடை

**2.6** சாதனத்தை நிறுத்தி வைத்தல், பாதுகாத்தல் மற்றும் பத்திரப்படுத்துதல்

**2.7** உங்கள் பயணத்தைத் திட்டமிடுதல்

**2.8** மூன்றாம் தரப்புப் பொறுப்பு காப்புறுதி

# 2.1 மின்-மிதிவண்டிகளுக்கான வரையறைகள்

## மின்-மிதிவண்டிகளுக்கான வரையறைகள் மற்றும் சட்டவிரோத மாற்றியமைப்பு

a) மிதிவண்டிகள், மின்-மிதிவண்டிகள் அனைத்தும் பொதுப் பாதைகளில் பயணிக்கும்போது சாதனங்களுக்கான பின்வரும் வரையறைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும். உங்கள் சாதனத்தை மாற்றியமைக்கக் கூடாது.

- மோதல் ஏற்படக்கூடிய வேளைகளில் கடுமையான காயங்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட பாரம் ஏற்றப்படாத அதிகபட்ச எடை 20 கிலோ ஆகும்.
  பாரம் ஏற்றப்படாத எடை என்பது ஏதேனும் கூடுதல் பாரங்களை ஏற்றுவதற்கு முன்னர் உள்ள, ஆனால் சாதனத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கருவிகளை உள்ளடக்கிய சாதனத்தின் எடையைக் குறிக்கிறது, (எ.கா. ஒரு தண்ணீர் புட்டி தாங்கி, பாரம் ஏற்றப்படாத எடையில் சேரும், ஆனால் தண்ணீர் புட்டி அதில் சேராது).

- பொதுப் பாதைகளில் சாதனங்கள் ஒன்றை ஒன்று பாதுகாப்பாகக் கடந்து செல்ல அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அகலம் 70 செ.மீ.

b) பின்வரும் அட்டவணை மின்-மிதிவண்டிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட வகை மற்றும் பதிவு செய்யப்பட வேண்டிய சாதனத் தேவைகளை சுருக்கமாகக் காட்டுகிறது.

<table>
<tr><th>PAB (நீல முத்திரை)<br>இனி பதிவு செய்ய முடியாது</th><th>PAB (ஆரஞ்சு முத்திரை)</th></tr>
<tr><td>பாரம் ஏற்றப்படாத அதிகபட்ச எடை 20 கிலோ (பொதுப் பாதைகளில் மட்டுமே பொருந்தும்)</td><td>பாரம் ஏற்றப்படாத அதிகபட்ச எடை 20 கிலோ</td></tr>
<tr><td colspan="2">சாதனங்கள் ஒன்றை ஒன்று பாதுகாப்பாகக் கடந்து செல்ல அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அகலம் 70 செ.மீ (பொதுப் பாதைகளில் மட்டுமே பொருந்தும்)</td></tr>
<tr><td colspan="2">ஓட்டத் தொடங்குவதற்கு உதவும் எந்தவோர் அம்சங்களும் அல்லது த்ரோட்டல்களும் மின்-மிதிவண்டிகளில் இருக்கக்கூடாது</td></tr>
<tr><td colspan="2">மின்-மிதிவண்டியை ஓட்டுபவர் பெடலை மிதிக்கத் தொடங்கும் போது மட்டுமே சாதனத்தின் மோட்டார் சக்தி இயங்கத் தொடங்கலாம்.</td></tr>
<tr><td colspan="2">மின்-மிதிவண்டியை ஓட்டுபவர் பெடலை மிதிப்பதை நிறுத்தும் போது சாதனத்தின் மோட்டார் சக்தி இயங்குவது நிற்க வேண்டும்.</td></tr>
<tr><td colspan="2">மின்-மிதிவண்டி மணிக்கு 25 கி.மீ. வேகத்தை எட்டும்போது அல்லது மின்-மிதிவண்டியின் மின்சார மோட்டார் மின்சாரம் வழங்குவதை நிறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட வேகத்தை எட்டும்போது, இவற்றில் எது குறைவோ அந்த வேகத்தை எட்டும்போது, மின்சார மோட்டார் மேற்கொண்டு மின்சாரம் வழங்குவதை நிறுத்த வேண்டும்.</td></tr>
<tr><td>மின்-மிதிவண்டியின் மின்சார மோட்டாரின் ஒட்டுமொத்த அதிகபட்ச மின்சார வெளியீட்டு மதிப்பீடு 200 வாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்</td><td>மின்-மிதிவண்டியின் மின்சார மோட்டாரின் அதிகபட்ச தொடர்ச்சியான மின்சார மதிப்பீடு 250 வாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்</td></tr>
<tr><td>-</td><td>மின்சாரத்தால் இயங்கக்கூடிய மின்-மிதிவண்டிகளுக்கான ஐரோப்பிய பாதுகாப்பு தரநிலையான EN15194 உடன் இணங்கியிருக்க வேண்டும்</td></tr>
</table>

c) மின்-மிதிவண்டி வாங்கும் போது, அதில் அசல் பேட்டரி மாடல் நிறுவப்பட்டு வழங்கப்படுகிறதா என்பதைச் சரிபார்க்கவும். LTA-இன் ஒன் மோட்டரிங் இணையத்தளத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மின்-மிதிவண்டி மாடல்களின் பட்டியலைக் கொண்டு நீங்கள் பேட்டரி விவரக்குறிப்புகளை ஒப்பிடலாம்.

d) மின்-மிதிவண்டியின் அசல் மின்சார அல்லது இயந்திர பாகங்களை மாற்றவோ அல்லது திருத்தவோ முயற்சிக்காதீர்கள். அத்தகைய பாகங்களின் உதாரணங்களில் பின்வருவன மட்டுமல்லாது, பிறவும் உள்ளடங்கும்:

- மின்கலன்கள்
- மின்கம்பிவடங்கள் / மின்னிணைப்புகள் மற்றும் மின்கம்பிகள்
- மோட்டார்
- கைப்பிடி, சட்டகம் மற்றும் தொங்கிகள்
- இருக்கையும் அதன் கீழுள்ள கம்பி

## மின்-மிதிவண்டியைப் பதிவு செய்தல்

a) மின்-மிதிவண்டிகள் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு LTA அங்கீகரித்த சோதனை நிலையத்தில் அங்கீகரிக்கப்பட்டு, சீல் வைக்கப்பட்டிருக்க வேண்டும். வகை அங்கீகரிப்புச் செயல்முறையின்வழி சாதனம் வரையறைகளுக்கு உட்படுகிறதா என்பது சரிபார்க்கப்படும்.

b) அனைத்து மின்-மிதிவண்டிகளிலும் LTA-இன் சின்னமும் வரிசைப்படுத்தப்பட்ட எண்ணும் கொண்ட நீல அல்லது ஆரஞ்சு முத்திரை ஒட்டப்பட்டிருக்க வேண்டும். முத்திரையை திருத்தவோ அல்லது அகற்றவோ கூடாது.



c) பதிவு எண்ணைத் தாங்கிய பதிவுத் தகடு, மின்-மிதிவண்டியின் பின்புறத்தில் நிரந்தரமாக ஒட்டப்பட்டுத் தெளிவாகத் தெரிய வேண்டும்




## 2.2 சாதனத் தரநிலைகள் (EN15194) மற்றும் தீப் பாதுகாப்பு

a) மின்சாரத்தால் இயங்கக்கூடிய மின்-மிதிவண்டிகளுக்கான ஐரோப்பிய EN15194 பாதுகாப்பு தரநிலைக்கு மின்-மிதிவண்டிகள் இணங்கியிருக்க வேண்டும்.

b) அதிகளவு சூடாவதைத் தடுக்கவும், தீ விபத்துகளின் அபாயத்தைக் குறைக்கவும் முறையான மற்றும் பாதுகாப்பான கையாளுதலை உரிமையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும்:

- தீப்பற்றக்கூடிய பொருட்களிலிருந்து விலக்கி, கடினமான, திறந்த மற்றும் தட்டையான மேற்பரப்புகளில் மின்னேற்றம் செய்யுங்கள்.
- குளிர்ந்த அறையில், வெப்பத்திலிருந்து விலக்கி மின்னேற்றம் செய்யுங்கள்.
- மின்னேற்றம் செய்யும் போது துணியால் சாதனத்தை மூடக்கூடாது, ஏனெனில் இது வெப்பச் சிதறல் வேகத்தைக் குறைத்துவிடும்.
- தேவைக்கு அதிகமாக மின்னேற்றம் செய்வதைத் தவிர்க்கவும். பேட்டரிகளை அல்லது சாதனங்களை இரவு முழுவதும் மின்னேற்றம் செய்யக் கூடாது. பேட்டரியை தேவைக்கும் அதிகளவு மின்னேற்றம் செய்தால் அளவுக்கதிகமாகச் சூடேறி தீப்பிடிக்கலாம்.

- வெப்பச் சிதறலுக்கு இடம் கொடுக்கவும். சாதனம் சூடாக இருக்கும்போது மின்னேற்றம் செய்வதைத் தவிர்க்கவும் (எ.கா. பயன்படுத்திய உடனேயே). ஏனெனில் இது எதிர்பாராத சேதத்திற்கு வழிவகுத்து, சாதனத்தின் பாதுகாப்பை சீர்குலைக்கும்.

- ஈரமாக இருக்கும்போது பேட்டரியை மின்னேற்றம் செய்வதைத் தவிர்க்கவும். மின்கசிவு ஏற்படுவதைத் தடுக்க, சாதனத்தை மின்னேற்றம் செய்வதற்கு முன் அதை உலர வைக்கவும்.

- பேட்டரிகளில் ஏதேனும் சேதம் அல்லது உருமாற்றங்கள் (எ.கா. பேட்டரிகள் துருப்பிடித்து அரித்தல் அல்லது தூளாகுதல்) ஏற்பட்டுள்ளனவா எனத் தவறாமல் சோதிக்கவும்.

- மின்-மிதிவண்டிகளை முறையாகப் பத்திரப்படுத்தி வைக்கவும். மின்கலன்களை (பேட்டரிகள்) அறை வெப்பநிலையில் வைத்திருக்க வேண்டும்.

- மின்-மிதிவண்டியின் மின்சார அமைப்பிலிருந்து மின்சாரத்தைப் பயன்படுத்தும் கூடுதல் விளக்குகள் மற்றும் மின்சார/மின்னணு பாகங்கள் ஆகியவற்றைப் பொருத்துவது போன்ற மாற்றங்களை அல்லது திருத்தங்களை மின்-மிதிவண்டியின் அசல் மின்சார பாகங்களில் செய்யக்கூடாது.

- மின்-மிதிவண்டி தயாரிப்பாளரால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பாதுகாப்புக் குறியீடு உள்ள மின்னேற்றிகளை மட்டுமே பயன்படுத்துங்கள்.

SAFETY MARK
123456-00

## 2.3 மின்-மிதிவண்டியின் பராமரிப்பு

a) சாதனத்தை சிறப்பாக ஓடும் நிலையில் வைத்திருக்க, மின்-மிதிவண்டிகளை மாதத்திற்கு ஒரு முறை பராமரிக்க வேண்டும். அறிவுறுத்தல்களுக்கு சாதனக் கையேட்டைப் பார்க்கவும் .

b) உங்கள் மின்-மிதிவண்டியை 3 முதல் 6 மாதங்களுக்கு ஒரு முறையாவது பழுதுநீக்கத்திற்குக் கொண்டுச் செல்ல வேண்டும்.

c) மின்-மிதிவண்டியின் எந்தப் பாகத்தையும் மூன்றாம் தரப்புப் பாகங்களைக் கொண்டு மாற்ற வேண்டாம். ஏனெனில் இது தீ ஆபத்தை ஏற்படுத்தும். அங்கீகரிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளரால் பாகங்களை மாற்றம் செய்யப்பட வேண்டும். தேய்ந்து, நைந்த பாகங்களை அசல் தயாரிப்பாளரின் பாகங்களைக் கொண்டு அவரால் மாற்ற முடியும். எடுத்துக்காட்டாக, ஆற்றல் இழந்த பேட்டரிகளை அங்கீகரிக்கப்பட்ட விவரக்குறிப்புகளின்படி அசல் பேட்டரியைக் கொண்டு மட்டுமே மாற்ற வேண்டும்.

## 2.4 ஓட்டுவதற்கு முன்னர் மின்-மிதிவண்டியின் பாகங்களைச் சரிபார்த்தல்

மின்-மிதிவண்டியை ஓட்டுவதற்கு முன், நீங்கள் கீழ்க்கண்டவற்றைச் சரிபார்க்க வேண்டும்:

### அது சிறப்பாகச் செயல்படும் நிலையில் இருக்கவேண்டும்

a) பிரேக்குகள் சரியாக இயங்குகின்றனவா என்றும், அவை தேய்ந்து போகவில்லை என்பதையும் சரிபார்க்கவும். பிரேக் விசைகள் முறையாகச் செயல்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்த அவற்றை அழுத்திச் சரிபார்க்கவும். அதோடு, அவை சக்கரங்களை நிறுத்துவதற்கான அழுத்தத்தை வழங்குகின்றனவா என்பதையும் சரிபார்க்கவும்.

b) சக்கரங்களில் முறையாக காற்றேற்றப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்கவும். அவை கையால் அழுத்தி நசுக்க முடியாத அளவிற்குக் கடினமாக இருக்க வேண்டும். டயரின் ரப்பரில் எந்த வெடிப்புகளோ, கிழிசல்களோ இருக்கக் கூடாது. டயரின் தெளிவாகக் காணும்வகையில் இருக்க வேண்டும். டயரின் வரிப்பள்ளங்கள் தெளிவாகத் தெரியும் நிலையில் இருக்க வேண்டும். மின்-மிதிவண்டியின் உடற்பகுதியில் ஏதேனும் விரிசல்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.


c) மடக்கக்கூடிய சாதனங்களுக்கு, எல்லா தாழ்பாள்களும் சரியாக பூட்டப்படுகிறதா எனச் சரிபார்க்கவும்.

d) இருக்கை ஏற்ற உயரத்தில் இருப்பதை உறுதி செய்யவும். மின்-மிதிவண்டியின் இருபுறமும் உங்கள் பாதங்களால் தரையைத் தொட முடியாவிட்டால், நிறுத்தும்போது உங்கள் சாதனத்தின் மீது உங்களுக்கு முழுக் கட்டுப்பாடு இருக்காது.

e) இருக்கையின் உயரத்தைச் சரிசெய்துகொள்ளுங்கள். அதன்மூலம், உங்கள் பாதம் பெடலின் கீழ் நிலையில் இருக்கும் போது உங்களுடைய நீட்டிக்கப்பட்ட காலின் முட்டி இலேசாக மடங்கிய நிலையில் (சுமார் 20 டிகிரி கோணத்தில்) இருக்கும்.



f) இருக்கை கோணத்தையும் உங்கள் வசதிக்கு ஏற்ப சரிசெய்யலாம். அது மிகவும் முன்னோக்கி அல்லது பின்னோக்கி சாய்ந்திருந்தால், மரமரப்பு அல்லது காயத்தை ஏற்படுத்தலாம்.



## பாரங்களை நிர்வகித்தல்

a) பாரங்கள் மற்றும் துணைக்கருவிகள் (எ.கா. சேணப் பைகள், தொலைபேசி தாங்கி போன்றவை) முறையாகப் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.


b) பாரங்கள் உங்கள் பார்வையை மறைக்கவோ அல்லது நீங்கள் ஸ்டியரிங்கை திருப்புவதை பாதிக்கவோ கூடாது. அதிக பாரங்கள் உங்கள் சாதனத்தைக் கட்டுப்படுத்துவதைக் கடினமாக்கும். அவை உங்கள் விளக்குகளை அல்லது பதிவுத் தகடையும் மறைக்கக் கூடாது.

c) உங்கள் சாதனத்தில் பயணிகளுக்கான முறையான இருக்கைகள் இருந்தால் மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்லுங்கள். பயணிகள் உங்கள் பார்வையை மறைக்கக் கூடாது.

d) மின்-மிதிவண்டியில் பின்னிருக்கை அசலாக நிறுவப்பட்டிருந்தால் மட்டுமே, பின்னிருக்கையில் பயணிக்க அனுமதிக்கப்படுகிறது. உங்கள் மின்-மிதிவண்டியில் பின்னிருக்கை பொருத்தி மாற்றியமைக்கக் கூடாது. பின்னிருக்கையில் பயணம் செய்பவர்களின் வயது குறைந்தபட்சம் 16 ஆக இருக்க வேண்டும்.

## விளக்குகளைச் சரிபார்த்தல்

a) மிதிவண்டிகளிலும் மின்-மிதிவண்டிகளிலும் முன்புற வெள்ளை விளக்கு மற்றும் பின்புற சிவப்பு விளக்கு பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.



b) இரவு 7 மணி முதல் காலை 7 மணி வரை ஓட்டும்போது விளக்குகள் இயக்கப்பட வேண்டும். புறப்படத் தயாராவதற்கு முன் விளக்குகள் இயங்குகின்றனவா என்று சரிபார்க்கவும். இரவில் விளக்குகள் இல்லாமல் ஓட்டுவது குற்றமாகும்.

c) உங்கள் விளக்குகள் அதிகப் பிரகாசமாக இருக்கக்கூடாது அல்லது மற்றவர்களின் முகத்தில் ஒளியைப் பாய்ச்சும் விதமாக இருக்கக்கூடாது. ஏனெனில் அவை மற்றவர்களுக்குக் கனநேர பார்வையிழப்பை ஏற்படுத்தக்கூடும்.

d) சாதனத்தின் பேட்டரியைப் பயன்படுத்தும் விளக்குகளைப் பொருத்தி உங்கள் சாதனத்தை மாற்றியமைக்கக் கூடாது. இது சட்டவிரோத மாற்றியமைப்பாகக் கருதப்படுகிறது.

## 2.5 பாதுகாப்புக் கவசங்கள் மற்றும் ஆடை

a) சாலைகளில் தலைக்கவசம் அணிவது கட்டாயமானது (மிதிவண்டிகளுக்கும் மின்-மிதிவண்டிகளுக்கும் மட்டுமே). உங்கள் பாதுகாப்புக்காகப் பாதைகளில் தலைக்கவசம் அணியவும் ஊக்குவிக்கப்படுகிறது. விபத்து ஏற்பட்டால் தலையில் பலத்த காயம் ஏற்படக்கூடிய சாத்தியத்தைத் தலைக்கவசம் குறைக்கிறது.

- உங்கள் தலைக்கவசம் நன்றாகப் பொருந்துவதை உறுதிசெய்து, அதை முறையாகப் பிணைக்கவும்.
- விரிசலடைந்த அல்லது சிதைந்த தலைக்கவசத்தைப் பயன்படுத்தக் கூடாது. விபத்துக்குள்ளான தலைக்கவசம் சேதமடைந்திருக்கலாம் என்பதால் அதை மாற்ற வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனைத் தரநிலைகளால் அங்கீகரிக்கப்பட்ட தலைக்கவசத்தை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

b) மற்ற பயனர்களின் பார்வையில் படும் வகையில் பிரகாசமான வண்ணங்களில், ஃப்ளோரசெண்ட் அல்லது ஒளியைப் பிரதிபலிக்கும் ஆடையை அணியுங்கள்.

c) இன் கேஸ் ஆஃப் எமர்ஜென்சி (In Case of Emergency, ICE) அட்டை அல்லது அவசரகாலத்தில் தேவைப்படக்கூடிய பெயர், அடையாள அட்டை எண், இரத்த வகை, அவசரகாலத் தொடர்பு மற்றும் மருந்து ஒவ்வாமைகள் (ஏதேனும் இருந்தால்) போன்ற தகவல்களைக் கொண்ட அடையாளச் சீட்டை நீங்கள் கொண்டு செல்ல வேண்டும்.

d) சக்கரங்களில் சிக்கிக் கொள்ளக்கூடிய பொன்ச்சோ போன்ற தளர்வான ஆடைகளை அணிய வேண்டாம்.

# 2.6 சாதனத்தை நிறுத்தி வைத்தல், பாதுகாத்தல் மற்றும் பத்திரப்படுத்துதல்

a) உங்கள் சாதனத்தைப் பொறுப்புணர்வுடன் நிறுத்தி வையுங்கள். மற்றவர்களுக்குத் தடங்கல் அல்லது சிரமத்தை ஏற்படுத்தாதீர்கள். உங்கள் சாதனத்தை நடைவழித்தடங்களில், பேருந்து நிறுத்தங்களில் அல்லது மரங்கள் மற்றும் விளக்குக் கம்பங்களில் சாய்த்தவாறு நிறுத்தி வைக்காதீர்கள்.



b) நீங்கள் மஞ்சள் நிறப் கட்டங்கள் அல்லது மிதிவண்டி நிலையடுக்குகள் போன்ற அதற்கென ஒதுக்கப்பட்ட வாகன நிறுத்துமிடங்களில் சீரான மற்றும் முறையான வகையில் நிறுத்தி வைக்க வேண்டும். உங்களுக்கு அருகிலுள்ள பொது மிதிவண்டி நிறுத்தி வைக்கும் இடங்களைத் தேடிக் கண்டறிவதற்கு, MyTransport.SG கைப்பேசி செயலியைப் பயன்படுத்தலாம்.



c) நீங்கள் நிறுத்தி வைத்த சாதனம் மற்றவர்களுக்குத் தடங்கல் அல்லது சிரமத்தை ஏற்படுத்தினால், உங்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம். அதோடு, உங்கள் சாதனம் பறிமுதல் செய்யப்படலாம்.

d) திருட்டைத் தடுக்க உங்கள் சாதனத்தைப் பிணைத்து வைக்கவும்.

# 2.7 உங்கள் பயணத்தைத் திட்டமிடுதல்

## மிதிவண்டி பாதைகளிலும் சாலைகளிலும் ஓட்டுதல்

a) நடைபாதைகளில் மின்-மிதிவண்டிகளுக்கு அனுமதியில்லை. சாலைகள் மற்றும் மிதிவண்டி பாதைகளில் அவை அனுமதிக்கப்படுகின்றன.

b) விரைவுச்சாலைகளில் அல்லது சுரங்கச்சாலைகளில் ஓட்டுவது, ஓட்டுபவர்களின் பாதுகாப்பிற்காகக் கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. விரைவுச்சாலை மற்றும் சுரங்கச்சாலைகளின் பட்டியலை LTA-இன் ஒன் மோட்டரிங் இணையத்தளத்தில் காணலாம்.


c) வழித்தடத்தின் ஒரு பகுதி நடைபாதையாக இருந்தால், மின்-மிதிவண்டி ஓட்டிகள் அத்தகைய பகுதிகளில் பயணிக்கும்போது தங்கள் சாதனங்களில் இருந்து இறங்கித் தள்ளிக்கொண்டு நடந்து செல்ல வேண்டும் அல்லது அந்த தூரத்தை சாலைக்கு நகர்ந்து கடக்க வேண்டும்.

d) சாலைகள் அல்லது மிதிவண்டி பாதைகளில் சாதனத்தை ஓட்டுவதற்கு முன் உங்கள் பயணப்பாதையைத் திட்டமிட வேண்டும். பாதைக் கட்டமைப்பின் வரைபடம், LTA வலைத்தளத்திலும் MyTransport.SG கைப்பேசி செயலியிலும் கிடைக்கும்.

e) வாகனங்கள் விரைவாக பயணிக்கும் சாலைகளைத் தவிர்க்கவும்

## பொதுப் போக்குவரத்தில் மின்-மிதிவண்டிகளைக் கொண்டு செல்லுதல்

a) மின்-மிதிவண்டி மற்றும் மிதிவண்டிகளின் அளவு வரம்புக்கு உட்பட்டிருந்தால் (120 செ.மீ x 70 செ.மீ x 40 செ.மீ) பொதுப் பேருந்துகளிலும் ரயில்களிலும் அவை அனுமதிக்கப்படும். பெருவிரைவு ரயில் நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் உள்ள அளவு சரிபார்ப்பான்களைப் பயன்படுத்துங்கள்.



b) வெளியில் நீட்டிக்கொண்டிருக்கும் பாகங்களால் மற்றவர்களுக்கு காயம் அல்லது உடைமைக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்பதால், மடக்கக்கூடிய சாதனங்களை மடக்கி வைத்திருக்க வேண்டும்.

c) பேருந்துகள் மற்றும் ரயில்களில் இருக்கும் போது மோட்டார் பொருத்தப்பட்ட சாதனங்கள் அணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

d) பேருந்துகளின் படிக்கட்டு அல்லது மேல் தளத்தில் சாதனங்கள் அனுமதிக்கப்படாது.

e) பெருவிரைவு/இலகு ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள்/முனையங்கள் அல்லது ரயில்கள் மற்றும் பேருந்துகளில் இவற்றை ஓட்டக் கூடாது. இந்தப் பகுதிகளில் உங்கள் சாதனங்களில் இருந்து இறங்கி, தள்ளிக்கொண்டோ அல்லது சுமந்துகொண்டோ செல்லுங்கள்.

f) நடையோரங்கள் மற்றும் கதவுகளை மறைக்கக் கூடாது. நீங்கள் கூட்டம் குறைவாக உள்ள ரயில் பெட்டிகளை நோக்கி நகர வேண்டும்.

## 2.8 மூன்றாம் தரப்புப் பொறுப்பு காப்புறுதி

a) விபத்து ஏற்பட்டால் (எ.கா. மற்றவர்களுக்குக் காயங்கள் அல்லது சொத்து சேதம் காரணமாக ஏற்படும் செலவுகள்) உங்களுக்கு எதிரான கோரிக்கைகளுக்கு மூன்றாம் தரப்புப் பொறுப்பு காப்புறுதி பொறுப்பேற்கிறது. சில காப்புறுதித் திட்டங்கள் உங்களது தனிப்பட்ட விபத்துச் செலவுகளையும் ஈடுகட்டுகின்றன.

b) உங்கள் வேலை நிமித்தமாக நீங்கள் ஏதேனும் உந்து நடமாட்டச் சாதனங்களை ஓட்டினால், நீங்கள் மூன்றாம் தரப்புப் பொறுப்பு காப்புறுதியால் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதித் திட்டங்கள் பற்றி மேல்விவரம் அறிய, go.gov.sg/am-insurance இணையத்தளத்தை நாடுங்கள்.

c) நீங்கள் பொழுதுபோக்குக்காக சாதனத்தை ஓட்டினாலும் கூட, மூன்றாம் தரப்புப் பொறுப்பு காப்புறுதியை வாங்க ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

## பயிற்சி நிரல் 3

# மின்-மிதிவண்டியைப் (PAB) பயன்படுத்துவதற்கான விதிகளும் நடத்தை ஒழுங்குமுறைகளும்

## கற்றல் விளைவுகள்

1. மின்-மிதிவண்டியை எவ்வாறு கையாள்வது என்பதைச் சுருக்கமாக விவரிக்க முடியவேண்டும்.

2. வெவ்வேறு பாதை வகைகள், குறியீடுகள் மற்றும் உள்கட்டமைப்பை அடையாளம் கண்டறிய முடியவேண்டும். அதோடு, அவற்றை எதிர்கொள்ளும்போது எடுக்க வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகளை விளக்க முடியவேண்டும்.

3. பாதைகளில் மின்- மிதிவண்டியை ஓட்டிச் செல்வதற்கான விதிகளில் **குறைந்தபட்சம் 3 விதிகளைப்** பட்டியலிட முடியவேண்டும்.

4. சாலைகளில் மின்- மிதிவண்டியை ஓட்டிச் செல்வதற்கான விதிகளில் **குறைந்தபட்சம் 3 விதிகளைப்** பட்டியலிட முடியவேண்டும்.

5. **சாலைக்கு அப்பால் நிகழும் 3 வெவ்வேறு சூழ்நிலைகளில்** எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விவரிக்க முடியவேண்டும்.

6. **சாலையில் நிகழும் 9 வெவ்வேறு சூழ்நிலைகளில்** எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விவரிக்க முடியவேண்டும்.

7. சாதனத்தை ஓட்டிச் செல்லும்போது வெவ்வேறு ஆபத்துகளை அடையாளம் கண்டு, அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை விளக்க முடியவேண்டும்.

8. விபத்து நேரும் போது மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை விவரிக்க முடியவேண்டும்.

# தலைப்புகள்

3.1 மின்-மிதிவண்டியைக் கையாளும் திறன்கள்

3.2 பாதை வகைகள், குறியீடுகள் மற்றும் பாதை உள்கட்டமைப்பு வகைகள்

3.3 மின்-மிதிவண்டிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்

3.4 சாலைக்கு அப்பாலுள்ள சூழல்களைக் கடப்பது

3.5 சாலையிலுள்ள சூழல்களைக் கடப்பது

3.6 சிறந்த நடைமுறைகள் மற்றும் நடத்தை விதிகள் - மிதிவண்டி பாதைகள் மற்றும் சாலைகளில் மின்-மிதிவண்டியை ஓட்டுதல்

3.7 உத்தேச ஆபத்துகளை அடையாளம் காணுதல்

3.8 விபத்து நிகழும் போது என்ன செய்ய வேண்டும்

# 3.1 மின்-மிதிவண்டியைக் கையாளும் திறன்கள்

## 3.1.1 தொடங்குதல் மற்றும் நிறுத்துதல்

a) கைப்பிடிகளைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளுங்கள்.

b) நிறுத்தும்போது, மெதுவாக பிரேக் பிடித்து படிப்படியாக நிறுத்தத்திற்குக் கொண்டு வாருங்கள். நீங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரிடும் என்பதால் திடீரென பிரேக் பிடிப்பதைத் தவிர்க்கவும்.

c) அங்குமிங்கும் வளைந்து வளைந்து செல்லக் கூடாது.

## 3.1.2 ஒரே நேர்க்கோட்டில் ஓட்டுதல்

a) கீழே பார்க்காமல், முன்னோக்கி, எதிர்வருபவற்றைப் பாருங்கள்.

b) நீங்கள் ஸ்டியரிங்கைப் பிடித்துக்கொண்டிருக்கும் போது, உங்கள் தோள்களைத் தளர்வாக வைத்துக் கொள்ளுங்கள்.

c) கைப்பிடிகளைத் திடீரென அதிவேகத்தில் திருப்பக் கூடாது.

## 3.1.3 கை சைகைகள்

a) நீங்கள் எந்தத் திசையில் திரும்புகிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு, உங்கள் கையை முன்னதாகவே உயர்த்துங்கள்.



நான் வலதுபுறத்திற்கு நகர விரும்புகிறேன் அல்லது வலதுபுறம் திரும்ப விரும்புகிறேன்.



நான் இடதுபுறத்திற்கு நகர விரும்புகிறேன் அல்லது இடதுபுறம் திரும்ப விரும்புகிறேன்.



நான் வேகத்தைக் குறைக்க விரும்புகிறேன்.



நான் நிறுத்த விரும்புகிறேன்.

b) சைகை காட்டும் போது உங்கள் கைப்பிடிகளைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளுங்கள்.

c) சைகை காட்டும் போது அங்குமிங்கும் வளைந்து வளைந்து செல்லக் கூடாது.

## 3.1.4 இடதுபுறம் அல்லது வலதுபுறம் திரும்புதல்

a) சரளமாகத் திரும்பும் வகையில் தொடர்ந்து பெடல் செய்யுங்கள்.

b) திரும்புவதற்கு முன் உங்களுக்குப் பின்னால் வரும் பயனர்கள் மீது கவனம் வையுங்கள்.

c) நீங்கள் திரும்பும் திசையை அருகிலுள்ள பாதைப் பயனர்களுக்குக் கை சைகைகளைப் பயன்படுத்தி தெரிவிக்கவும். உங்கள் சாதனத்தின் மணியை ஒலிக்கவும் அல்லது தேவைப்பட்டால் சொல்லவும்.

## 3.1.5 குறைவான வேகத்தில் ஓட்டுதல்

a) உங்கள் தோள்களைத் தளர்வாக வைத்துக் கொள்ளுங்கள். கைப்பிடிகளைத் திடீரென அதிவேகத்தில் திருப்பக் கூடாது.

b) நீங்கள் நிலையற்று அல்லது அரக்கப்பரக்க இருப்பதாக உணர்ந்தால் சாதனத்தில் இருந்து இறங்கி தள்ளிக்கொண்டு நடந்து செல்லுங்கள்.

## 3.1.6 ஏற்றமான அல்லது இறக்கமான பாதைகளில் ஓட்டுதல்

a) ஏற்றமான அல்லது இறக்கமான பாதைகளில் செல்லும்போது உங்கள் சாதனத்தைக் கட்டுப்படுத்துவதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால், இறங்கித் தள்ளிக்கொண்டு நடந்து செல்லுங்கள்.

b) இறக்கமான பாதைகளில் செல்லும்போது உங்கள் வேகத்தைக் கட்டுப்படுத்த மெதுவாக பிரேக் பிடியுங்கள்.

c) திடீரென்று பிரேக் பிடிக்கவோ அல்லது கைப்பிடிகளைத் திடீரென அதிவேகத்தில் திருப்பவோ வேண்டாம். ஏனென்றல் நீங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரிடும்.

# 3.2 பாதை வகைகள், குறியீடுகள் மற்றும் பாதை உள்கட்டமைப்பு வகைகள்

a) பொதுப் பாதைகளில் 2 வகைகள் உள்ளன நடைபாதைகள் மற்றும் மிதிவண்டி பாதைகள்.

b) மின்- மிதிவண்டிகளை மிதிவண்டி பாதைகளிலும் சாலைகளிலும் **மட்டுமே** ஓட்டலாம் (விரைவுச்சாலைகள், விரைவுச்சாலையின் சுரங்கச்சாலைகள் மற்றும் சாலையிலுள்ள சுரங்கச்சாலைகள் தவிர).

c) நடைபாதைகளில் செல்லும்போது மின்-மிதிவண்டியில் இருந்து இறங்கி, தள்ளிக்கொண்டு நடந்து செல்லுங்கள்.


d) அனைத்து பாதை குறியடையாளங்கள், குறியீடுகள் மற்றும் போக்குவரத்து சமிக்ஞைகளுக்குக் கீழ்படியுங்கள்.

## 3.2.1 நடைபாதைகள் மற்றும் மிதிவண்டி பாதைகளை அடையாளம் காணுதல்

### நடைபாதைகள்

a) **நடைபாதைகள்** பொதுவாகச் சாம்பல் நிறத்தில் இருக்கும். அவற்றில் குறியடையாளங்கள் அல்லது சிறப்பு மேற்பூச்சுகள் எதுவும் இருக்காது.

b) பாதைகளை இணைக்கும் திறந்தவெளிகளும் கூட நடைபாதைகளாகும். எ.கா. முற்றங்கள், சமூக/நகர கடைத்தொகுதிகள் மற்றும் சதுக்கங்கள்.





c) PMA-கள், மிதிவண்டிகள் மற்றும் மோட்டார் பொருத்தப்படாத PMD-கள் மட்டுமே நடைபாதைகளில் அனுமதிக்கப்படுகின்றன.

d) நடைபாதைகளில் அனுமதிக்கப்படும் வேக வரம்பு மணிக்கு 10 கிமீ.




## மிதிவண்டி பாதைகள்

a) **மிதிவண்டி பாதைகளை**, பாதையின் தொடக்கத்தில் வரையப்பட்டிருக்கும் மிதிவண்டி ஓட்டுநர், மிதிவண்டி, பாதசாரி மற்றும் மிதிவண்டி அல்லது “PCN” சின்னங்களைக் கொண்டு அடையாளம் காணலாம். இந்தப் பாதைகளில் உந்து நடமாட்டச் சாதனங்கள் அனைத்தும் அனுமதிக்கப்படுகின்றன.

b) சாலை நெடுகில் உள்ள **மிதிவண்டி பாதைகள்** பொதுவாகச் சாம்பல் அல்லது சிவப்பு நிறத்தில் இருக்கும். குடியிருப்புப் பேட்டைகளில் உள்ள சில **மிதிவண்டி பாதைகள்** பல வண்ணங்களைக் கொண்டிருக்கலாம் (எ.கா. நீலம், பச்சை மற்றும் ஆரஞ்சு)









## 3.2.2 சிறப்பு வட்டாரங்கள்

### பாதசாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வட்டாரங்கள்

a) சாதனங்களை ஓட்டுபவர்களுக்கும் பாதசாரிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவும் **மிதிவண்டி பாதைகள்** (எ.கா. பாதசாரிகள் கடந்து செல்லும் இடம், பேருந்து நிறுத்தங்களுக்குப் பின்புறம்), **பாதசாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வட்டாரமாகக்** குறிக்கப்பட்டிருக்கின்றன. வண்ணமிடப்பட்ட மிதிவண்டி பாதைகளில் சிவப்புநிற இடைவிட்டக் கோடுகளுடன் அவை குறிக்கப்பட்டிருக்கின்றன.

b) பாதையைப் பயன்படுத்தும் மற்ற பயனர்களைக் கவனித்து, வேகத்தை நடைவேகத்திற்குக் குறைக்கவும் அல்லது பாதசாரிகள் அதிகமாக இருந்தால் இறங்கி, தள்ளிக்கொண்டு நடந்து செல்லவும்.






### பள்ளி வட்டாரங்கள்

a) பிள்ளைகளுக்கு ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்கித் தருவதற்காக, சில பள்ளிகளுக்கு வெளியே உள்ள **நடைபாதைகள் பள்ளி வட்டாரமாகக்** குறிக்கப்பட்டிருக்கின்றன. பாதைப் பயனர்கள் வேகத்தைக் குறைக்க நினைவூட்டுவதற்காக “பள்ளி வட்டாரம்" என்ற சின்னமும், “மெதுவாக" என்ற குறியடையாளங்களும், தரையில் உருட்டொலி



எழுப்பும் தகடுகளும் குறிக்கப்பட்டிருக்கும்.

b) இவை நடைபாதைகள் என்பதால், மோட்டார் பொருத்தப்பட்ட PMD-கள் (மின்-ஸ்கூட்டர்கள் உட்பட) மற்றும் மின்-மிதிவண்டிகள் இந்த வட்டாரங்களில் அனுமதிக்கப்படுவதில்லை.




## பாதசாரிகளுக்கு மட்டுமான வட்டாரங்கள்

a) பாதசாரிகளுக்கு மட்டுமான வட்டாரங்களின் தரையில் “ஓட்டிச் செல்லக்கூடாது" என்ற குறியீடுகளும் சிவப்பு முக்கோண குறியடையாளங்களும் குறிக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, பிடோக் நகர மையத்தின் சில பகுதிகள் பாதசாரிகளுக்கு மட்டுமான வட்டாரங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.



b) இந்த வட்டாரங்களில் PMA-களை மட்டுமே ஓட்டிச்செல்லலாம். இந்த வட்டாரங்களில் பிற சாதனங்களை ஓட்டிச்செல்வது குற்றமாகும்.



## 3.2.3 பாதைக் குறியீடுகளும் குறியடையாளங்களும்

### பாதை குறியீடுகளின் வகைகள்

**தடைக் குறியீடுகள்**









### ஓட்டிச் செல்லக்கூடாது

- இந்தப் பகுதியில் சாதனத்தை ஓட்டிச்செல்ல அனுமதி கிடையாது. எல்லா சாதனப் பயனர்களும் (PMA பயனர்கள் தவிர) சாதனத்தில் இருந்து இறங்கி, தள்ளிக்கொண்டு நடந்து செல்ல வேண்டும்.
- இந்த குறியீடுகளை பாதசாரிகளுக்கான மேம்பாலங்களிலும் பாதசாரிகளுக்கு மட்டுமான வட்டாரங்களிலும் காணலாம்.
- “ஓட்டிச் செல்லக்கூடாது" குறியீடுகளைக் கொண்ட பகுதிகளில் அல்லது பாதைகளில் சாதனத்தை ஓட்டிச்செல்வது குற்றமாகும்.






### பாதசாரிகள் அல்லது மிதிவண்டி ஓட்டுநர்கள் சாலையைக் கடப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது

பாதசாரிகளும் சாதன ஓட்டிகளும் இந்த இடத்தில் சாலையைக் கடக்க அனுமதி கிடையாது. இதற்குப் பதிலாக முன்னால் உள்ள கடப்பைப் பயன்படுத்தவும்.

| எச்சரிக்கைக் குறியீடுகள் | |
|---|---|
| <br>**வேகத்தைக் குறைத்து, பாதசாரிகளுக்கு வழிவிடவும்**<br>வேகத்தை குறைத்து, பாதசாரிகளுக்கு வழிவிடவும். | <br>**மற்ற வாகனங்களைக் கவனித்து எச்சரிக்கையாக இருக்கவும்**<br>வேகத்தைக் குறைத்து, எதிர்வரும் வாகனங்களைக் கவனித்து எச்சரிக்கையாக இருக்கவும் |
| <br>**மெதுவாகச் செல்க**<br>வேகத்தைக் குறைத்து, குறியீட்டுக்குப் அப்பால் கவனமாக ஓட்டவும். | <br>**எச்சரிக்கை - தாழ்வான உயரம்**<br>எதிர்வரும் தாழ்வான உயரத்தைக் கவனித்து எச்சரிக்கையாக இருக்கவும். |
| <br>**சரிவுப்பாதை வருகிறது - வேகத்தைக் குறைக்கவும்**<br>சரிவுப்பாதை வருவதால் வேகத்தைக் குறைத்து, எச்சரிக்கையாக இருக்கவும். | |

## ஆலோசனைக் குறியீடுகள்







### ஒரே தடத்தில் செல்லுங்கள்

- பாதசாரிகளுக்கும் மிதிவண்டிகளுக்கும் தனித்தனி பாதைகள் வழங்கப்பட்டுள்ளன. உங்களுக்குரிய பாதையில் இடதுபுறமாகச் செல்லுங்கள்.
- வழக்கமாக மிதிவண்டி பாதையின் தொடக்கத்தைக் குறிக்கிறது.




### பகிரப்படும் பாதை

- இந்தப் பாதையை சாதன ஓட்டிகள், பாதசாரிகள் இருவரும் பகிர்ந்து கொள்கின்றனர்.
- சாதனத்தை ஓட்டிச்செல்லும் போது இடதுபுறமாகச் சென்று, பாதசாரிகளுக்கு வழிவிடுங்கள்.
- வழக்கமாக மிதிவண்டி பாதையின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

## தகவல் குறியீடுகள்/ குறியடையாளங்கள்/ சமிக்ஞைகள்

PCN Round Island Route

PCN

**PCN சின்னம்**



**மிதிவண்டி ஓட்டுநர் சின்னம்**



**பாதசாரி மற்றும் மிதிவண்டி ஓட்டுநர் சின்னம்**



**மிதிவண்டி சின்னம்**


## தகவல் குறியீடுகள்/ குறியடையாளங்கள்/ சமிக்ஞைகள்



### பாதசாரிகள் மட்டுமான குறியடையாளங்கள்


இந்தச் சிவப்பு முக்கோணங்களால் குறிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் சாதனத்தை ஓட்ட அனுமதி கிடையாது. பாதசாரிகள் மட்டுமான பகுதியைச் சிவப்பு முக்கோணங்கள் குறிக்கின்றன.

எல்லா சாதனப் பயனர்களும் (PMA பயனர்கள் தவிர) சாதனத்தில் இருந்து இறங்கி, தள்ளிக்கொண்டு நடந்து செல்ல வேண்டும்



### மிதிவண்டி கடந்து செல்லுமிடம்

சாதன ஓட்டுநர்கள் வழங்கப்பட்டுள்ள மிதிவண்டி கடந்து செல்லுமிடத்தைப் பயன்படுத்த வேண்டும்.




### ‘நில்’ அல்லது ‘கவனி’ கட்டத்தைக் கொண்ட மிதிவண்டி கடந்து செல்லுமிடம்

சாதன ஓட்டுநர்கள் வழங்கப்பட்டுள்ள மிதிவண்டி கடந்து செல்லுமிடத்தைப் பயன்படுத்த வேண்டும். விளக்குகள் பச்சை நிறமாக மாறும் வரை, பட்டையான மஞ்சள் கோட்டிற்குப் பின்னால் காத்திருங்கள்.

## 3.2.4 சாலையைக் கடந்து செல்லுமிடங்களின் வகைகள்

முடிந்தவரை முறையான கடந்து செல்லுமிடங்களைப் பயன்படுத்துங்கள். சாதனங்களை ஓட்டும் அனைவரும் வேகத்தைக் குறைத்து, நிறுத்தி, நடைவேகத்தில் சாலையைக் கடப்பதற்கு முன் வாகனங்கள் எதிர் நோக்கி வருகின்றனவா என்று கவனிக்க வேண்டும். சாலையைக் கடப்பதற்கு முன் நிறுத்தாமல் இருப்பது குற்றமாகும்.

| போக்குவரத்து சமிக்ஞைகளைக் கொண்ட கடப்பிடங்கள் | |
|---|---|
| **மிதிவண்டி கடப்பிடங்கள்** | **பாதசாரிகளுக்கான கடப்பிடங்கள்** |
|  |  |
| • சாதன ஓட்டிகள் இடதுபுறமாக, மிதிவண்டி ஓட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் வழித்தடத்திற்குள் இருக்க வேண்டும்.<br>• “சிவப்பு மிதிவண்டி" விளக்கு எரியும் போது அல்லது “பச்சை மிதிவண்டி" விளக்கு மினுமினுக்கும் போது கடக்கக்கூடாது. | • இந்தக் கடப்பிடங்களில் மிதிவண்டி ஓட்டுவதற்கென ஒதுக்கப்பட்ட வழித்தடங்கள் இல்லை.<br>• சாதன ஓட்டிகள் இடதுபுறமாக, சீரான முறையில் செல்ல வேண்டும்.<br>• எப்போதும் பாதசாரிகளைக் கவனித்து, அவர்களுக்கு வழிவிடுங்கள். |

## போக்குவரத்துச் சமிக்ஞைகள் இல்லாத கடப்பிடங்கள்

### குறியிடப்பட்ட கடப்பிடங்கள்



இந்தக் கடப்பிடங்கள் ஜீப்ரா கிராசிங்ஸ் (பாதசாரிகள் கடப்பதற்கான வரிக்கோட்டுப் பாதைகள்) என்றும் அழைக்கப்படுகின்றன. இவை சாலையில் அடர்த்தியான வெள்ளைக் கோடுகளாலும், மினுமினுக்கும் மஞ்சள் நிற ஒளி வழிகாட்டிகளாலும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

### முறையற்ற கடப்பிடங்கள்



இந்தக் கடப்பிடங்களில் எந்தக் குறியீடுகளோ அல்லது குறியடையாளங்களோ இருக்காது. கார்ப்பேட்டை அணுகல்கள் மற்றும் சிறிய சாலை சந்திப்புகள் போன்ற சாலையுடன் குறுக்கிடும் பாதை உள்ள சந்திப்புகளில் இவற்றைக் காணலாம்.

## சுரங்கப்பாதைகள்



- 'பாதசாரிகளுக்கு வழிவிடுங்கள்' குறியீடுகளைக் கொண்டிருக்கும் சுரங்கப்பாதைகள், நடைபாதைகளாகக் கருதப்படுகின்றன.
- மோட்டார் பொருத்தப்பட்ட PMD (மின்-ஸ்கூட்டர்கள் உள்பட) மற்றும் PAB பயனர்கள் அவற்றில் இருந்து இறங்கி, தள்ளிக்கொண்டு நடந்து செல்ல வேண்டும்.




- சாதனங்களை ஓட்டிச்செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
- PMA பயன்படுத்துவோர் தவிர, அனைத்து சாதனப் பயனர்களும் சாதனத்தில் இருந்து இறங்கி, தள்ளிக்கொண்டு நடந்து செல்ல வேண்டும்.

## மேம்பாலங்கள்




Sheltered ramps leading up to pedestrian overhead bridges make it more accessible for cyclists. However, cyclists are advised to dismount due to limited space
Image credit: sgpedestrianbridges.blogspot.sg

### பாதசாரிகளுக்கான மேம்பாலங்கள்

- பாதசாரிகளுக்கான மேம்பாலங்களிலும், அவற்றை இணைக்கின்ற சரிவுப்பாதைகளிலும், மிதிவண்டி சின்னம் குறிக்கப்பட்டிருக்காவிட்டால், அவற்றில் சாதனங்களை ஓட்டிச் செல்வதற்கு அனுமதியில்லை.

- மேம்பாலங்களின் குறுக்கே சாதனத்தை ஓட்டிச்செல்லக் கூடாது.



### சரிவுத்தடங்களைக் கொண்ட மேம்பாலங்கள்

- சாதனங்களை உருட்டிச் செல்வதற்கான சரிவுத்தடங்கள், சாதனங்களை மேம்பாலங்களின் குறுக்கே கொண்டு செல்வதை எளிதாக்குகின்றன. உங்கள் சாதனத்தை படிக்கட்டுகளில் எடுத்துச்செல்ல இந்தச் சரிவுத்தடங்களைப் பயன்படுத்துங்கள்.

- மேம்பாலங்களுக்கு குறுக்கே சாதனத்தை ஓட்டிச்செல்லக் கூடாது



## சரிவுத்தடங்கள் இல்லாத மேம்பாலங்கள்

- உங்கள் சாதனத்தை நீங்கள் படிக்கட்டுகளில் தூக்கிக்கொண்டு செல்ல வேண்டும். உங்களால் அவ்வாறு செய்ய முடியாவிட்டால், அடுத்த சாலைக் கடப்பிடத்தைப் பயன்படுத்துங்கள்.
- மேம்பாலங்களின் குறுக்கே சாதனத்தை ஓட்டிச்செல்லக் கூடாது.



## மிதிவண்டிக்கான பாலங்கள்

- இவற்றில் பாதசாரிக்கும் மிதிவண்டிக்கும் தனித்தனி வழித்தடக் குறியீடுகள் இருக்கும்.
- குறிக்கப்பட்டிருக்கும் மிதிவண்டி வழித்தடத்திற்குள் சீரான முறையில் ஓட்டிச் செல்லுங்கள்.

## 3.2.5 சாலைப் போக்குவரத்துக் குறியீடுகள்

**மின்-மிதிவண்டி** ஓட்டுபவர்கள் கட்டாய மற்றும் தடைக் குறியீடுகள் அனைத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும். அவற்றைக் கடைப்பிடிக்காதிருப்பது குற்றமாகும்.

| கட்டாயம் பின்பற்ற வேண்டிய குறியீடுகள் | |
|---|---|
|   ***நிறுத்து***<br>வெள்ளை நிறக் கோட்டிற்கு முன்பாக நிறுத்துங்கள் வலது மற்றும் இடது புறத்திலிருந்து வரும் வாகனங்களுக்கு வழிவிடுங்கள். |   ***வழிவிடு***<br>வேகத்தைக் குறையுங்கள், தேவைப்பட்டால் மின்-மிதிவண்டியை நிறுத்துங்கள். பிரதான சாலைகளில் செல்லும் வாகனங்களுக்கு வழிவிடுங்கள். |
|   ***நிறுத்து - பிள்ளைகள்***<br>மின்-மிதிவண்டியை நிறுத்தி, பாதசாரிகள் சாலையைக் கடக்கிறார்களா என்று கவனியுங்கள். |     ***இடதுபுறம் திரும்புவதற்கான சிவப்பு விளக்கு***<br>• திரும்புவதற்கான உங்கள் நோக்கத்தைச் சுட்டிக்காட்டுங்கள்.<br>• சிவப்பு விளக்கு எரியும் போது மின்-மிதிவண்டியை நிறுத்தி, பாதசாரிகள் கடந்துசெல்வதற்கு வழிவிடுங்கள்.<br>• வலதுபுறமிருந்து வரும் வாகனங்களுக்கு வழிவிடுங்கள்.<br>• உங்களுக்குப் பின்னால் இடதுபுறம் திரும்புகின்ற வாகனங்கள் மீது கவனம் கொள்ளுங்கள்.<br>• நீங்கள் திரும்புவது பாதுகாப்பானதாக இருக்கும் போது மட்டுமே திரும்புங்கள். |

| கட்டாயம் பின்பற்ற வேண்டிய குறியீடுகள் | |
|---|---|
|  வலதுபுறம் மட்டுமே திரும்பவும் |  அடுத்துவரும் வலதுபுறம் திரும்பவும் |
|  இடதுபுறம் மட்டுமே திரும்பவும் |  அடுத்துவரும் இடதுபுறம் திரும்பவும் |
|  முன்புறம் மட்டுமே செல்லவும் |  இடதுபுறமாகச் செல்லவும் |
|  *பிளவுப் போக்குவரத்து*<br>நீங்கள் சாலையின் இருபுறங்களிலும் கடந்து செல்லலாம். இடது அல்லது வலது புறமாகத் திரும்புவதற்கான உங்கள் நோக்கத்தைப் பிற சாலைப் பயனர்களுக்குத் தெரிவிக்க, பொருத்தமான கை சைகைகளைப் பயன்படுத்தவும். | |

| தடைக் குறியீடுகள் | |
|---|---|
| <br>நுழைய அனுமதியில்லை | <br>முந்திச்செல்லக் கூடாது |
| <br>வலதுபுறம் திரும்பக்கூடாது | <br>இடதுபுறம் திரும்பக்கூடாது |
| <br>மோட்டார்சைக்கிள்கள் மற்றும் பெடல் மிதிவண்டிகள் நுழைய அனுமதியில்லை<br>(மிதிவண்டி மற்றும் மின்-மிதிவண்டிகள் உட்பட) | |

**எச்சரிக்கைக் குறியீடுகள்,** எதிர்வரவுள்ள உத்தேச அபாயங்கள் குறித்து சாலைப் பயனர்களை எச்சரிப்பதற்குப் பயன்படுகின்றன. அனைத்து மிதிவண்டி ஓட்டுநர்களும் (பெடல் மிதிவண்டி ஓட்டுபவர்கள் மற்றும் மின்-மிதிவண்டி ஓட்டுபவர்கள்) கேத்தைக் குறைத்து, எச்சரிக்கையுடன் தொடர்ந்து முன் செல்ல வேண்டும்.

| எச்சரிக்கைக் குறியீடுகள் | | | |
|---|---|---|---|
|  | **அடுத்து வரும் இடதுபக்கத் திருப்பத்தில் வளைவு**<br>வேகத்தைக் குறைத்து, இடதுபுறமாகச் செல்லவும்.முந்தவோ, U- வளைவைச் செய்யவோ அல்லது நிறுத்தவோ கூடாது. |  | **அடுத்து வரும் வலதுபக்கத் திருப்பத்தில் வளைவு**<br>வேகத்தைக் குறைத்து, வலதுபுறமாகச் செல்லவும்.முந்தவோ, U- வளைவைச் செய்யவோ அல்லது நிறுத்தவோ கூடாது. |
|  | **எதிர்வரும் சாலைப்பகுதியில் இடது பக்கத்தில் துணைச் சாலை**<br>வேகத்தைக் குறைக்கவும். இடதுபுறத்தில் இருந்து இணைகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும். மரங்கள் அல்லது குறியீடுகளால் உங்கள் பார்வை மறைக்கப்படும் போது, கூடுதல் கவனம் செலுத்தவும். |  | **எதிர்வரும் சாலைப்பகுதியில் வலது பக்கத்தில் துணைச் சாலை**<br>வேகத்தைக் குறைக்கவும். வலதுபுறத்தில் இருந்து இணைகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும். மரங்கள் அல்லது குறியீடுகளால் உங்கள் பார்வை மறைக்கப்படும் போது, கூடுதல் கவனம் செலுத்தவும். |



**Y-சந்திப்பு**

வேகத்தைக் குறைக்கவும். பொருத்தமான கை சைகைகளைப் பயன்படுத்தி இடது அல்லது வலது புறமாகத் திரும்புவதற்கான உங்கள் நோக்கத்தைப் பிற சாலைப் பயனர்களுக்குத் தெரிவிக்கவும்.இடது அல்லது வலது புறத்தில் இருந்து இணைகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**இரட்டை வளைவு எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைத்து, இடதுபுறமாகச் செல்லவும். முந்தவோ, U-திருப்பம் செய்யவோ அல்லது நிறுத்தவோ கூடாது.



**குறுக்குச் சாலைகள் எதிர்வருகின்றன**

வேகத்தைக் குறைக்கவும். சந்திப்பை நெருங்கும் போது, வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**T-சந்திப்பு எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைக்கவும். வலது மற்றும் இடது புறத்திலிருந்து வரும் வாகனங்களுக்கு வழிவிடவும்.



**வட்டச்சுற்று வழி எதிர்வருகிறது**

வலது புறத்தில் உள்ள வாகனங்களுக்கு வழி விடவும். வெளியேறுவதற்கு வழித்தடங்களை மாற்றுகின்ற வாகனங்கள் குறித்து தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருக்கவும்.அவை மிகவும் பெரியவையாகவோ அல்லது மிக வேகமாகச் செல்பவையாகவோ இருக்கலாம்.



**பல சாலைகள் சந்திக்கும் சந்திப்பு**

வேகத்தைக் குறைக்கவும்.வலது மற்றும் இடது புறத்தில் இருந்து இணைகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**இருவழிப் போக்குவரத்து எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைக்கவும். இடதுபுறமாகச் செல்லவும். எதிர்வரக்கூடிய வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்



**ஒருவழிப் பாதையில் இருவழிப் பாதை எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைக்கவும். வலது மற்றும் இடது புறத்தில் இருந்து இணைகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**வழித்தடங்கள் இணைகின்றன**

வேகத்தைக் குறைக்கவும். வலது அல்லது இடது புறத்திலிருந்து ஒரே வழித்தடத்தில் சேரும் வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**இடதுபுறத்தில் இருந்து வாகனங்கள் ஒன்றிணையும் இடம் எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைக்கவும். இடதுபுறத்தில் இருந்து இணைகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**எதிர்வரும் வலதுபுறத்தில் சாலை குறுகுகிறது**

வேகத்தைக் குறைக்கவும். முந்திச்செல்லவோ, U-வளைவை மேற்கொள்ளவோ அல்லது உங்கள் வாகனத்தை நிறுத்தி வைக்கவோ கூடாது.



**எதிர்வரும் இடதுபுறத்தில் சாலை குறுகுகிறது**

வேகத்தைக் குறைக்கவும். முந்திச்செல்லவோ, U-வளைவை மேற்கொள்ளவோ அல்லது உங்கள் வாகனத்தை நிறுத்தி வைக்கவோ கூடாது.



**எதிர்வரும் சாலைப்பகுதியின் இருபுறங்களிலும் சாலை குறுகுகிறது**

வேகத்தைக் குறைக்கவும். முந்திச்செல்லவோ, U-வளைவை மேற்கொள்ளவோ அல்லது உங்கள் வாகனத்தை நிறுத்தி வைக்கவோ கூடாது.



**இரட்டைப்பாதை விரைவில் முடிவடைகிறது**

வேகத்தைக் குறைத்து, இடதுபுறமாகச் செல்லவும். ஒரே பாதையில் இணையும் வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**வழுக்கலான சாலை எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைத்து, கவனமாக ஓட்டவும்.



**போக்குவரத்து விளக்குகள் எதிர்வருகின்றன**

வேகத்தைக் குறைக்கவும். போக்குவரத்து விளக்குகள் மாறுவது குறித்து கவனமுடன் இருக்கவும். போக்குவரத்து விளக்கு விதிகளை மதித்து கடைப்பிடிக்கவும்.



**பாதசாரிகளுக்கான கடப்பிடம் எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைக்கவும். ஒதுக்கப்பட்டுள்ள கடப்பிடங்களில் பாதசாரிகளுக்காக நிறுத்தவும்.



**விரைவுச்சாலை எதிர்வருகிறது**

நுழையக் கூடாது. மிதிவண்டிகளுக்கும் மின்-மிதிவண்டிகளுக்கும் விரைவுச்சாலைகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது.



**U-வளைவு எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைத்து, தேவையெனில் நிறுத்தவும். எதிர்ப்பக்கமிருந்து வரும் வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**U-வளைவு எதிர்வருகிறது (எதிர்த்திசையில் இருந்து)**

வேகத்தைக் குறைத்து, தேவையெனில் நிறுத்தவும். எதிர்த்திசையில் U-வளைவு செய்யும் வாகனங்கள் குறித்து எச்சரியாக இருக்கவும்.



**சரிசமமற்ற சாலை எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைத்து, இடதுபுறமாகச் செல்லவும். முந்திச்செல்லக் கூடாது.



**சாலை மேடு எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைத்து, இடதுபுறமாகச் செல்லவும். முந்திச்செல்லக் கூடாது.



**மேல்நோக்கிய செங்குத்தான பாதை எதிர்வருகிறது**

இடதுபுறமாகச் சென்று, கியரைக் குறைக்கவும். தேவையெனில், மிதிவண்டியிலிருந்து இறங்கி, சாலையின் இடதுபுறமாகத் தள்ளிக் கொண்டு செல்லவும். முந்திச் செல்லவோ U-வளைவை மேற்கொள்ளவோ கூடாது.



**கீழ்நோக்கிய செங்குத்தான பாதை எதிர்வருகிறது**

இடதுபுறமாகச் சென்று, கியரைக் குறைக்கவும். உங்கள் மிதிவண்டியின் வேகத்தைக் கட்டுக்குள் வைத்துக் கொள்ளவும். பெடலை மிதிக்காமல் செல்லக் கூடாது. முந்திச்செல்லவோ, U-வளைவை மேற்கொள்ளவோ கூடாது.

| | |
|---|---|
|  **பாதசாரிகள் கடப்பதற்கான உயர்த்தப்பட்ட வரிக்கோட்டுப் பாதை**<br>வேகத்தைக் குறைக்கவும். பாதசாரிகள் கடப்பதற்கான உயர்த்தப்பட்ட வரிக்கோட்டுப் பாதையில் பாதசாரிகள் கடந்து செல்வதற்காக நிறுத்தவும். |  **வாகனம் பழுதடைந்துள்ளது**<br>வேகத்தைக் குறைத்து, தேவையெனில் நிறுத்தி, பொருத்தமான கை சைகைகளைப் பயன்படுத்தி, பழுதடைந்த வாகனத்தை முந்திச் செல்லத் தயாராகவும். |
|  **பிள்ளைகள் எதிர்வரக்கூடும்**<br>வேகத்தைக் குறைக்கவும். பிள்ளைகள்சாலையைக் கடக்கிறார்களா என்று கவனமாகப் பார்க்கவும். |  **மூத்தோர் அல்லது உடற்குறையுள்ள பாதசாரிகள் நடமாடுமிடம் எதிர்வருகிறது**<br>வேகத்தைக் குறைக்கவும். நடமாட்டச் சிரமம் உள்ளவர்கள் அல்லது வயதான பாதசாரிகள் சாலையைக் கடக்கிறார்களா என்று கவனமாகப் பார்க்கவும். |




**பள்ளி வட்டாரம்**

வேகத்தைக் குறைக்கவும். பிள்ளைகள் சாலையைக் கடக்கிறார்களா என்று கவனமாகப் பார்க்கவும்.




**மூத்தோர் அல்லது உடற்குறையுள்ள பாதசாரிகள் நடமாடுமிடம் எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைக்கவும். நடமாட்டச் சிரமம் உள்ளவர்கள் அல்லது வயதான பாதசாரிகள் சாலையைக் கடக்கிறார்களா என்று கவனமாகப் பார்க்கவும்.



**கலத்துறை மேடை அல்லது ஆற்றங்கரை எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைக்கவும். சாலை எதிரே முடிவடைவது குறித்து கவனமுடன் இருக்கவும்.



**விலங்குகள் எதிர்வரலாம்**

வேகத்தைக் குறைத்து, தேவையெனில் நிறுத்தவும். விலங்குகள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**விமானங்கள் தாழ்வாகப் பறக்கும் இடம் எதிர்வருகிறது**

தாழ்வாகப் பறக்கும் விமானத்தில் இருந்து திடீரென்று வெளிப்படும் இரைச்சல் குறித்து கவனமுடன் இருக்கவும்.

**ஒழுங்குமுறைக் குறியீடுகள்**, வாகனப்பாதையில் போக்குவரத்து நடமாட்டத்தை ஒழுங்குபடுத்த உதவுவதற்குப் பயன்படுகின்றன.

## ஒழுங்குமுறைக் குறியீடுகள்




**இப்போது வேகத்தைக் குறைக்கவும்**




**முந்திச் செல்லும் போது தவிர மற்ற நேரங்களில் பாதையில் இடதுபுறமாகச் செல்லவும்**

சாலையின் இடதுபுறத்தில் தொடர்ந்து சென்று, வலக்கோடி வழித்தடத்தை முந்திச் செல்லும் வாகனங்களுக்காக விட்டுவைக்கவும்.




**சாலைப் பணிகள் எதிர்வருகின்றன**

சாலைப் பணிகள் நடைபெறுவதன் காரணமாக வேகத்தைக் குறைத்து, எதிர்வரக்கூடிய இடைஞ்சல் குறித்து கவனமுடன் இருக்கவும்.




**ஒற்றை வழித்தடப் போக்குவரத்து**

போக்குவரத்து ஒற்றை வழித்தடத்தில் ஒன்றுசேர்வதால், வேகத்தைக் குறைத்து வழி விடவும்.




**50 மீட்டர் தூரத்தில் சுற்றுவழி எதிர்வருகிறது**

வேகத்தைக் குறைத்து, எதிர்வரும் சுற்றுவழிக்குத் தயாராகவும்.




**சுற்றுவழி**



**கூர்மையான திசைமாற்றம்**

வேகத்தைக் குறைத்து, சுட்டிக்காட்டப்பட்டுள்ள திசையில் ஓட்டவும்.



**ஒருவழிப் போக்குவரத்து**

இந்தச் சாலை நெடுகிலும் ரே திசையில் செல்லவேண்டும். இடது மற்றும் வலது புறமிருந்து போக்குவரத்தில் இணைகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.




**இடதுபுறத்தில் ஒருவழித் தெரு**

இந்த குறியீட்டில் இருந்து ஒருவழித் தெரு தொடங்குகிறது. ஒருவழித் தெருவினுள் திரும்புகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருக்கவும்.



**வளைவு ஒழுங்கமைப்புக் குறியீடு**

வளைவுகளில் வேகத்தைக் குறைத்து, கவனமாக ஓட்டவும்.

**தகவல் குறியீடுகள்**, வாகனப்பாதை குறித்த பயனுள்ள தகவல்களை மிதிவண்டி ஓட்டுநர்களுக்கும் பிற மோட்டார் வாகன ஓட்டுநர்களுக்கும் வழங்குகின்றன

| தகவல் குறியீடுகள் | |
|---|---|
|  **வலதுபுறமுள்ள துணைச் சாலையில் முட்டுச் சாலை உள்ளது**<br>வலதுபுறமுள்ள சாலை, வேறெந்த சாலைக்கும் இட்டுச் செல்லாது. |  **முட்டுச் சாலை**<br>குறுகிய தூரத்திற்குள் சாலை முடிவடைகிறது. |
|  **U-வளைவு**<br>U-வளைவு எதிர்வருகிறது. U-வளைவுக்குத் தயாராவதற்கு, பொருத்தமான வழித்தடத்தினுள் நுழையவும். |  **விரைவுச்சாலையின் தொடக்கம்**<br>சாலையின் மீது கவனம் வைத்து, விரைவுச் சாலையில் நுழைவதைத் தவிர்க்கவும். விரைவுச் சாலைகளில் மிதிவண்டிகளுக்கும் மின்-மிதிவண்டிகளுக்கும் அனுமதியில்லை. |



**பாதசாரிகளுக்கான கடப்பிடம்**

பாதசாரிகள் சாலையைக் கடக்கிறார்களா என்று தொடர்ந்து கவனிக்கவும். பாதசாரிகள் கடந்து சென்றால் அல்லது சாலையைக் கடக்கவிருந்தால், வேகத்தைக் குறைத்து, நிறுத்தவும்.



**மழைக்கு ஒதுங்குமிடம்**

மோட்டார்சைக்கிள் ஓட்டுநர்களும் சாலையில் செல்லும் மிதிவண்டி ஓட்டுநர்களும் மழைக்கு ஒதுங்குமிடம்



**வெள்ளை நிற ஊன்றுகோல்கள்**

வேகத்தைக் குறைத்து, நிறுத்துவதற்குத் தயாராகவும். அப்பகுதியில் உள்ள பார்வையற்ற பாதசாரிகளுக்கு வழிவிடவும்.




**போக்குவரத்து விளக்கு செயல்படும் நேரங்கள்**

போக்குவரத்து விளக்குகள் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே செயல்படுகின்றன.





**வேகக் கட்டுப்பாட்டுப் பட்டைகள் எதிர்வருகின்றன**

வேகத்தைக் குறைக்கவும்.

## 3.2.6 சாலையில் குறிக்கப்பட்டிருக்கும் குறியீடுகள்




வாகனப்பாதையின் வழித்தடங்களில் **உள்ள திசைகாட்டும் அம்புகள்**, சாதனத்தை ஓட்டுபவர்கள் செல்லக்கூடிய திசையைக் குறிக்கின்றன.






**ஒன்றாகச் சேரும் அம்புக்குறிகள்**, இரண்டு போக்குவரத்து வழித்தடங்கள் ஒரு வழித்தடமாக ஒன்றாகச் சேர்வதைக் குறிக்கின்றன. இரண்டு வழித்தடங்களில் இருந்து வரும் வாகனங்கள், ஒற்றை வழித்தடத்தினுள் மாறிமாறி நுழைவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றன.

ஒன்று சேர்கின்ற வழித்தடத்தில் நுழையும் போது, பின்புறம் மற்றும் பக்கவாட்டில் இருந்து வருகின்ற வாகனங்களைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும்.





**வழக்கமான பேருந்து வழித்தடங்கள்**
ஒரு தொடர்ச்சியான மஞ்சள் நிறக் கோட்டால் குறிக்கப்பட்டிருக்கும். பேருந்து வழித்தடம் இயங்கும் நேரங்களில் ஒற்றை வரிசையில் ஓட்டுங்கள்.

திங்கள் முதல் வெள்ளி வரை:
காலை 7.30 மணி முதல் காலை 9.30 மணி வரை,
மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை




**முழு நாள் பேருந்து வழித்தடங்கள்**
சிவப்பு மற்றும் மஞ்சள் நிறக் கோட்டால் குறிக்கப்பட்டிருக்கும். பேருந்து வழித்தடம் இயங்கும் நேரங்களில் ஒற்றை வரிசையில் ஓட்டுங்கள்.

திங்கள் முதல் சனி வரை:
காலை 7:30 மணி முதல் இரவு 11:00 மணி வரை





பேருந்து முன்னுரிமை கட்டம், வழிவிடும் கோடுகள் மற்றும் வழிவிடும் முக்கோணக் குறியீடு ஆகியவை, பேருந்துகள் பகுதிக்குக் கட்டாயமாக வழிவிடவேண்டும் என்பதைக் குறிப்பதற்காகப் பேருந்து வழித்தடத்தின் வெளியேறும் வழியில் குறிக்கப்பட்டிருக்கின்றன.


a) வழிவிடுவதற்கான முதல் முக்கோணக் குறியீட்டை நெருங்கும்போது வேகத்தைக் குறைத்து, பேருந்து நிறுத்தத்திலிருந்து பேருந்துகள் வெளியேறுகின்றனவா என்பதைக் கவனமுடன் பார்க்க வேண்டும்.

b) வழிவிடுவதற்கான இரண்டாவது முக்கோணக் குறியீட்டிற்குப் பின்பு, வழிவிடுவதற்கான கோடுகளுக்கு முன்பு வண்டியை நிறுத்தி, பேருந்து நிறுத்தத்தில் இருந்து வெளியேறுகின்ற பேருந்துகளுக்கு வழி விடவும்.

c) அனைத்து பேருந்துகளும் பேருந்து வழித்தடத்தில் இருந்து முழுமையாக வெளியேறிய பின் தொடர்ந்து செல்லவும்.






**இடைவிட்ட வெள்ளை நிற இணைக்கோடுகள்**, பிரதான சாலையுடன் இணையும் சிறிய சாலை சந்திப்பின் முடிவைக் குறிக்கின்றன. பிரதான சாலையில் செல்லும் வாகனங்களுக்கு வழிவிடுங்கள்.




பாதசாரிகளுக்கான இடைவிட்ட கடப்பிடக் கோடுகள், பாதசாரி கடப்பிடத்தைக் குறிக்கின்றன. இடைவிடாத வெள்ளை நிறக் கோட்டிற்கு முன்பாக நிறுத்துங்கள்.


## 3.2.7 சாலையில் பயணிக்கும் கண்ணோட்டத்தில் இருந்து சாலைக் கடப்புகளை நோக்குவது

சாலைகளில் ஓட்டும்போது, போக்குவரத்து விளக்கு சமிக்ஞைகளை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

| | |
|---|---|
|  | **சிவப்பு விளக்கு/அம்புக்குறி**<br>நிறுத்துங்கள், மேற்கொண்டு தொடரக் கூடாது. |
|  | **மஞ்சல் நிற விளக்கு/அம்புக்குறி**<br>வேகத்தைக் குறைத்து, நிறுத்துவதற்குத் தயாராகுங்கள்.<br>**மினுமினுக்கும் மஞ்சல் நிற விளக்கு**<br>போக்குவரத்து விளக்குகள் செயலிழந்துள்ளன. வலது புறத்தில் உள்ள வாகனங்களுக்கு வழி விடுங்கள் |
|  | **பச்சை விளக்கு/அம்புக்குறி**<br>எதிரே ஏதேனும் வாகனங்கள் வருகின்றனவா என்று கவனியுங்கள். பாதுகாப்பாக இருக்கும் போது மட்டுமே மேற்கொண்டு தொடருங்கள். நீங்கள் திரும்புவதாக இருந்தால், "பச்சை மனிதன்" சமிக்ஞை எரியும் போது சாலையைக் கடக்கும் பாதசாரிகளுக்கு நீங்கள் வழிவிட வேண்டும்.<br>**மினுமினுக்கும் பச்சை நிற அம்புக்குறி**<br>சமிக்ஞை நிற்கப்போகிறது. நீங்கள் நிறுத்தக் கோட்டைக் கடக்கவில்லை என்றால் மேற்கொண்டு தொடர வேண்டாம். |



**பாதசாரிகளுக்கான கடப்பிடம் எதிர்வருகிறது**
என்ற குறியடையாளங்கள், ஜீப்ரா கிராசிங் எதிர்வருகிறது என்பதைக் குறிக்கிறது. பாதசாரிகளைக் கவனித்து, அவர்களுக்கு வழிவிடுங்கள்.




**பேருந்து சமிக்ஞை முன்னுரிமை**
**பச்சை நிற "B" விளக்கு,** பேருந்து சமிக்ஞை முன்னுரிமையைக் குறிக்கிறது. பச்சை நிற "B" விளக்கு எரியும் போது, பேருந்துகள் மட்டுமே செல்லலாம்.




**மேம்பட்ட எச்சரிக்கை விளக்குகள்**
**மினுமினுக்கும் மஞ்சல் நிற விளக்குகள்,** போக்குவரத்து விளக்குகள் எதிர்வருவதைக் குறிக்கின்றன. வேகத்தைக் குறைத்து, நிறுத்துவதற்குத் தயாராகுங்கள்.

## 3.3 மின்-மிதிவண்டிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்

இந்த விதிகளும் ஒழுங்குமுறைகளும் சட்டப்படி தேவையானவை. இவற்றுக்கு இணங்க மறுப்பது குற்றமாகும். அதோடு, இத்தகைய குற்றத்திற்கு அபராதங்கள் மற்றும்/அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். தண்டனைகளின் பட்டியலுக்குப் பின்னிணைப்பு A -ஐ பார்க்கவும்.

### 3.3.1 நீங்கள் மின்-மிதிவண்டி ஓட்டலாமா?

a) மின்-மிதிவண்டி ஓட்டுபவர்கள் அதை ஓட்டுவதற்கு முன் PAB எழுத்துப்பூர்வத் தேர்வில் தேர்ச்சி பெற்று சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்*.

b) மின்- மிதிவண்டி ஓட்டுபவர்களும், பின்னிருக்கையில் அமர்பவர்களும் குறைந்தது 16 வயதுடையவர்களாக இருக்க வேண்டும்.

### 3.3.2 மின்-மிதிவண்டியை நீங்கள் எங்கு ஓட்டலாம்?

a) மின்- மிதிவண்டிகளை மிதிவண்டி பாதைகளிலும் சாலைகளிலும் மட்டுமே ஓட்டலாம்.

b) நடைபாதைகள், “ஓட்டிச் செல்லக்கூடாது" குறியீடுகள் உள்ள இடங்கள், விரைவுச்சாலைகள், விரைவுச்சாலை சுரங்கச்சாலைகள் அல்லது சாலையின் சுரங்கச்சாலைகள் ஆகியவற்றில் ஓட்டக்கூடாது.

c) எப்போது இறங்கித் தள்ளிக்கொண்டு நடந்து செல்ல வேண்டும்:

- நடைபாதைகளில்
- மிதிவண்டி பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் அல்லாத மேம்பாலங்களிலும் சரிவுப்பாதைகளிலும்
- “ஓட்டிச் செல்லக்கூடாது" என்ற குறியீடுகள் உள்ள இடங்களும், பாதசாரிகளுக்கு மட்டுமான வட்டாரங்களிலும்
- பாதசாரிகள் அதிகமுள்ள பகுதிகள் (எ.கா. நகர மையங்கள், அக்கம்பக்க நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள்) வழியாகக் கடந்து செல்லும்போது

* எழுத்துப்பூர்வத் தேர்வு அமலாக்கப்பட்டவுடன் மட்டுமே பொருந்தும்.

- வி.வ.க குடியிருப்புப்பேட்டைகளில் உள்ள கீழ்த்தள வெற்றிடங்கள், பொது நடைவழிகள், இடப்பரப்புகள் வழியாகக் கடந்து செல்லும்போது
- பேருந்து நிலையங்கள்/முனையங்கள் மற்றும் ரயில் நிலையங்களில்

## 3.3.3 சாலைக்கு அப்பால் ஓட்டுவது தொடர்பான பிற ஒழுங்குமுறைகள்

### a) வேக வரம்பு

- மிதிவண்டி பாதைகளில் மணிக்கு 25 கிமீ வேக வரம்புக்குள் செல்லுங்கள்.

### b) பொறுப்பற்ற முறையில் ஓட்டுவது

- சீரான முறையில் ஓட்டிச் செல்லுங்கள். பொறுப்பற்ற முறையில் ஓட்டி மற்றவர்களையோ அல்லது உங்களையோ ஆபத்துக்கு உள்ளாக்கிக் கொள்ளாதீர்கள்.

### c) கடப்பிடங்களில் நிறுத்துங்கள்

- ஓட்டுநர்கள் அனைவரும் எல்லா கடப்பிடங்களிலும் (சமிக்ஞை இருக்குமிடங்கள் மற்றும் சமிக்ஞை இல்லாத இடங்கள்) வேகத்தைக் குறைத்து, போக்குவரத்தைக் கவனித்துக் கடக்க வேண்டும்.

### d) விபத்து நிகழும்போது ஓட்டுநர்களின் கடமைகள்

- ஒருவர் காயமடையும் அல்லது உடமை சேதமடையும் விபத்தில் நீங்கள் சிக்கினால், உதவி வழங்குவதற்கு நீங்கள் மின்- மிதிவண்டியை நிறுத்த வேண்டும். உங்கள் விவரங்களைத் தெரிவித்து, விபத்தைப் புகார் செய்யவேண்டும். மேல் விவரங்களை பிரிவு 3.8 -இல் காணலாம்.

e) **அமலாக்க அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படியுங்கள்**

- அமலாக்க அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படியுங்கள். அமலாக்க அதிகாரி சொல்லும்போது மின்- மிதிவண்டியை நிறுத்தி, பாதையின் பக்கவாட்டுப் பகுதிக்குச் செல்லுங்கள்.

- அமலாக்க அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்வதைத் தடுக்கவோ, தாமதப்படுத்தவோ அல்லது குறுக்கிடவோ கூடாது.

## 3.3.4 சாலையில் ஓட்டுவது தொடர்பான பிற ஒழுங்குமுறைகள்

a) **சாலைகளில் ஓட்டும் முறை**

- அனைத்துப் போக்குவரத்து விளக்குகளுக்கும், விதிகளுக்கும் கீழ்ப்படியுங்கள்

- வாகனங்கள் பயணிக்கும் திசைக்கு நேர் எதிர் திசையில் ஓட்டக் கூடாது

- கூடுமானவரை சாலையின் இடதுபுற முனைக்கு நெருக்கமாக ஓட்டுங்கள்

- நேராகவும் சீராகவும் ஓட்டுங்கள்

- முன்கணிக்க முடியாத திடீர் அசைவுகளைச் செய்யாதீர்கள்

b) **தலைக்கவசம் அணிதல்**

- சாலையில் மின்-மிதிவண்டியை ஓட்டும்போது, ஓட்டுபவர்களும் பின்னிருக்கையில் இருப்பவர்களும் கண்டிப்பாகத் தலைக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.



## c) மற்ற மிதிவண்டிகள், மின்-மிதிவண்டிகள், ரிக்‌ஷாக்கள் அல்லது முச்சக்கர வண்டிகளுடன் அருகருகே பயணம் செய்தல்

- ஒற்றை வழித்தடச் சாலைகளில் முந்திச்செல்லாத வரை ஒற்றை வரிசையில் ஓட்டிச் செல்லுங்கள்.
- சாலையில் 2 அல்லது அதற்கு மேற்பட்ட வழித்தடங்கள் இருந்தால், இருவர் பக்கத்து பக்கத்தில் ஓட்டலாம்.



ஒற்றை வழித்தடச் சாலைகளிலும் பேருந்து வழித்தடம் நடப்பில் உள்ள நேரங்களிலும் ஒற்றை வரிசையில் மிதிவண்டி ஓட்டுங்கள்

## d) பேருந்து வழித்தடங்களில் பயணம் செய்தல்

- பேருந்து வழித்தடம் நடப்பில் இருக்கும் நேரங்களில், மின்-மிதிவண்டி ஓட்டுபவர்கள் ஒற்றை வரிசையில் ஓட்டவேண்டும்.

## e) முந்திச் செல்லுதல்


- ஒரு மோட்டார் வாகனத்தை முந்திச் செல்லும் போது தவிர, மற்ற நேரங்களில் அந்த மோட்டார் வாகனத்தின் வலது பக்கத்தில் ஓட்டிச் செல்ல வேண்டாம்.
- இடதுபுறம் திரும்பவிருக்கும் மோட்டார் வாகனத்தின் இடதுபுறமாக ஒருபோதும் முந்திச் செல்ல வேண்டாம்.

## f) விரைவுச்சாலைகளிலும் சுரங்கச்சாலைகளிலும் ஓட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது

- விரைவுச்சாலைகள், விரைவுச்சாலையின் சுரங்கச்சாலைகள், சாலையின் சுரங்கச்சாலைகள் ஆகியவற்றில் மின்-மிதிவண்டிகளுக்கு அனுமதி கிடையாது.

## g) சாலையில் உள்ள மிதிவண்டி வழித்தடங்களில் பயணித்தல் (தானா மேரா கோஸ்ட் சாலையில் மட்டுமே)

- மின்- மிதிவண்டி ஓட்டுபவர்கள் மிதிவண்டி வழித்தடத்தைப் பயன்படுத்தலாம். ஆனால் சாலையின் வேறு எந்தப் பகுதியையும் பயன்படுத்தக் கூடாது.



சாலையில் உள்ள மிதிவண்டி பாதை பற்றிய கூடுதல் தகவலுக்கு, go.gov.sg/tmcrcyclinglane இணையப்பக்கத்தைப் பார்வையிடுங்கள்.

## h) பார வரம்புகள்

- பிற சாலைப் பயனர்களுக்கு ஆபத்து, இடையூறு அல்லது தொந்தரவு ஏற்படுத்தக்கூடிய பாரங்களை எடுத்துச் செல்ல வேண்டாம்.

- அனைத்து பாரங்களும் மின்-மிதிவண்டியுடன் முறையாகப் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

## i) கட்டி இழுத்தல் அனுமதிக்கப்படவில்லை


- வேறொரு வாகனத்தைக் கட்டி இழுக்கவோ அல்லது வேறொரு வாகனத்தால் கட்டி இழுக்கப்படவோ கூடாது.

- சாலையில் செல்லும் வாகனத்தைப் பிடித்துக்கொண்டு செல்லக் கூடாது.

## 3.3.5 பாதைகள், சாலைகள் இரண்டிலும் ஓட்டுவது தொடர்பான பிற ஒழுங்குமுறைகள்

### a) இரவில் ஓட்டும் போது விளக்குகள் தேவை

- மின்- மிதிவண்டிகளில் முன்புற வெள்ளை விளக்கு மற்றும் பின்புற சிவப்பு விளக்கு அல்லது ரிஃப்ளக்டர் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். இரவு 7 மணி முதல் காலை 7 மணிக்கு இடையில் ஓட்டும்போது விளக்குகள் இயக்கப்பட வேண்டும்.



### b) மொபைல் தொடர்புச் சாதனங்கள்

- ஓட்டும் போது மொபைல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தக்கூடாது.
- இது, தொடர்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய எந்தவொரு சாதனத்தையும் குறிக்கிறது. கைக்கணினிகள் மற்றும் கையடக்கச் சாதனங்க்ள் அல்லது அணியக்கூடிய சாதனம் (எ.கா. ஸ்மார்ட் கடிகாரங்கள்) ஆகியவை இதில் உள்ளடங்கும்.
- சாதனத்தை ஓட்டும் போது மொபைல் தொடர்புச் சாதனங்களைக் கையில் பிடித்திருக்காமல் சாதனத்தில் பொருத்தி பயன்படுத்தலாம். ஆனால் நீங்கள் அதைப் பயன்படுத்த வேண்டியிருந்தால் சாதனத்தை நிறுத்துவது பாதுகாப்பானது.

## 3.4 சாலைக்கு அப்பாலுள்ள சூழல்களைக் கடப்பது

### a) பாதசாரிகளின் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகள் வழியாக செல்லுதல்

- பாதசாரிகளின் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளை நெருங்கும் போது, வேகத்தைக் குறைத்து, சாதனத்தை நிறுத்துவதற்குத் தயாராக வேண்டும் (எ.கா. பேருந்து நிறுத்தங்கள், போக்குவரத்துக் கடப்பிடங்கள் அல்லது மக்கள் கூட்டம் அதிகமுள்ள வீதிகள்).
- அத்தகைய இடங்களை கடந்து செல்லும்போது உங்கள் மின்-மிதிவண்டியை நடைவேகத்தில் ஓட்டுங்கள் அல்லது இறங்கி தள்ளிக்கொண்டு நடந்து செல்லுங்கள்.
- பாதுகாப்பான தூர இடைவெளியை கடைபிடியுங்கள்.எப்போதும் பாதசாரிகளுக்கு வழிவிடுங்கள்.


### b) பிற பாதைப் பயனர்களுக்குப் பின்னால் சாதனத்தை ஓட்டுதல்

- மற்ற ஓட்டுநர்களிடமிருந்து பாதுகாப்பான தூர இடைவெளியை கடைப்பிடியுங்கள். மிக நெருக்கமாகச் செல்லக் கூடாது. முன்னால் செல்பவர் திடீரென நிறுத்தினால், உங்களால் உரிய நேரத்தில் நிறுத்த முடியாமல் போகலாம். அதனால் விபத்து ஏற்படலாம்.

### c) மற்ற பாதைப் பயனர்களை முந்திச் செல்லுதல்

- உங்களுக்கு முன்னால் செல்வோரை நெருங்கும்போது வேகத்தைக் குறைக்கவும்.
- இருக்கும்போதே, நீங்கள் முந்திச்செல்ல விரும்புவதாக மற்றவரை மெல்ல எச்சரிக்கவும்.
- முந்திச்செல்வதற்கு முன், உங்களுக்கு முன்னாலும் பின்னாலும் யாரும் நெருங்கவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.
- முந்திச்செல்வதற்குப் போதுமான இடைவெளி இல்லையென்றால், மற்ற தரப்பினருக்குப் பின்னால் ஒரு பாதுகாப்பான தூர இடைவெளியை கடைப்பிடித்து, முந்திச்செல்வதற்கு ஏற்ற பாதுகாப்பான சமயம் வரும்வரை காத்திருங்கள்.

- பாதசாரிகளுக்கான கடப்பிடங்கள் வளைவுகள், பாதையை மறைக்கும் ஓரங்கள் போன்ற இடங்களை நெருங்கும் போது, மற்றவர்களை முந்திச் செல்லக் கூடாது.




## d) எதிரில் வருகின்ற பாதைப் பயனர்களை அணுகுதல்


- பாதையின் இடதுபுறமாகவே செல்லுங்கள்.
- எதிரில் வருகின்ற பாதைப் பயனாளர்களை நெருங்கும் போது, வேகத்தைக் குறைத்து, சாதனத்தை நிறுத்துவதற்குத் தயாராகுங்கள்.
- எதிரில் வருகின்ற பாதசாரிகளுக்கு வழிவிடுங்கள்.
- பாதையில் போதுமான இடைவெளி இல்லையென்றால், சாதனத்தை நிறுத்திவிட்டு, பாதையின் பக்கவாட்டுப் பகுதிக்கு நகரவும்.

## e) பயணிக்கும் பாதையில் நிறுத்துதல்

- நீங்கள் சாதனம் ஓட்டுவதை நிறுத்த விரும்பினால், மற்ற பயனர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பாதையின் பக்கவாட்டுப் பகுதிக்கு நகரவும்.

## 3.5 சாலையிலுள்ள சூழல்களைக் கடப்பது

### a) போக்குவரத்து விளக்கு கடப்பிடத்தைக் கொண்ட சாலை சந்திப்பில் இடதுபுறம் திரும்புதல்




1. இடதுபுறமாகவே செல்லுங்கள்.


2. இடதுபுறம் திரும்புவதற்கான கை சைகையை முன்கூட்டியே காண்பித்து, நீங்கள் திரும்பவிருப்பதைத் தெரியப்படுத்துங்கள்.

3. போக்குவரத்து விதிகளுக்குக் கீழ்ப்படிந்து, வாகனங்கள் செல்வதற்கான பச்சை நிற விளக்கு எரியும் போது மட்டுமே திரும்புங்கள்.

திரும்புகின்ற பிற வாகனங்களுக்குப் பின்னால் பாதுகாப்பான தூரத்தை நிலைநாட்டுங்கள். திரும்புகின்ற வாகனத்திற்கும் ஓரக்கல்லுக்கும் இடையே சிக்கிக்கொள்ளாதீர்கள்

சாலையைக் கடக்கின்ற பாதசாரிகளுக்கு எப்பொழுதும் வழிவிடுங்கள்..

## b) போக்குவரத்து விளக்கு கடப்பிடத்தைக் கொண்ட சாலை சந்திப்பில் நேராகச் செல்லுதல் - நேராக / இடதுபுறமாக திரும்புகின்ற வழித்தடம்





1. வலதுபுறம் திரும்புவதற்கான கை சைகையைக் காண்பிக்கவும்.சாலைச் சந்திப்பை நெருங்கும் போது, பின்னால் வாகனங்கள் உள்ளதா என்பதைக் கவனித்த பிறகு, வலதுபுறத்திலிருந்து வழித்தடத்தின் நடுவிற்கு நகருங்கள்.

2. போக்குவரத்து விதிகளைப் பின்பற்றி, வாகனங்களுக்கான பச்சை நிற விளக்குகள் எரியத் தொடங்கும் போது மட்டுமே சந்திப்பைக் கடப்பதற்கு மேற்கொண்டு செல்லுங்கள்.

3. வலதுபுறத் திருப்பத்தில் எதிரே வருகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருங்கள். பாதுகாப்பாக இருக்கும் போது மட்டுமே சாலைச் சந்திப்பைக் கடக்கவும்.

4. சாலைச் சந்திப்புக்குப் பிறகு, சாலையின் இடதுபுறத்திற்குத் திரும்பிச்செல்லவும்.

### c) போக்குவரத்து விளக்கு கடப்பிடத்தைக் கொண்ட சாலை சந்திப்பில் வலதுபுறம் திரும்புதல் - வலதுபுறம் மட்டும் திரும்புவதற்கான வழித்தடம்




1 நீங்கள் சந்திப்பில் வலதுபுறம் திரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவிக்க, வலதுபுறம் திரும்புவதற்கான கை சைகையைக் காண்பிக்கவும்.

2 சாலைச் சந்திப்பை நெருங்கும் போது, உங்களுக்குப் பின்னால் வாகனங்கள் உள்ளதா என்பதைக் கவனித்த பிறகு, **வலதுபுறம்** திரும்புகின்ற வழித்தடத்தின் இடக்கோடி தடத்திற்குச் சென்று, வழித்தடத்தின் **இடதுபக்கத்தில்** உங்களை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்.


3 போக்குவரத்து விதிகளுக்குக் கீழ்ப்படியுங்கள். வாகனங்களுக்கான பச்சை நிற விளக்குகள் எரியத் தொடங்கும் போது மட்டுமே வலதுபுறம் திரும்புவதற்கு மேற்கொண்டு செல்லுங்கள்.

4 வலதுபுறம் திரும்பும் போது எதிரே வருகின்ற வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் குறித்து கவனமுடன் இருங்கள். நீங்கள் திரும்புவது பாதுகாப்பாக இருக்கும் போது மட்டுமே திரும்புங்கள்.

5 வலதுபுறம் திரும்பும் மற்ற வாகனங்களுக்கு உங்கள் வலதுபுறத்தில் உங்களை முந்திச்செல்ல இடமளிக்க, பரந்த அரைவிட்டத்தைப் பயன்படுத்தவும்.

6 வலதுபுறம் திரும்பும்போது சாலையின் இடக்கோடிக்கு நகர்ந்து செல்லவும்.

## d) போக்குவரத்து விளக்கு கடப்பிடத்தைக் கொண்ட சாலை சந்திப்பில் வலதுபுறம் திரும்புதல் - நேராக / வலதுபுறம் திரும்புவதற்கான வழித்தடம்




1. நீங்கள் சந்திப்பில் வலதுபுறம் திரும்புகிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு, வலதுபுறம் திரும்புவதற்கான கை சைகையைக் காண்பிக்கவும்.

2. சாலைச் சந்திப்பை நெருங்கும் போது, பின்னால் வாகனங்கள் உள்ளதா என்பதைக் கவனித்த பிறகு, <u>வலதுபுறம் திரும்புகின்ற வழித்தடத்தின் இடக்கோடிக்குச் சென்று</u>, வழித்தடத்தின் நடுவில் உங்களை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்.

3. போக்குவரத்து விதிகளுக்குக் கீழ்ப்படியுங்கள். வாகனங்களுக்கான பச்சை நிற விளக்குகள் எரியத் தொடங்கும் போது மட்டுமே வலதுபுறம் திரும்புங்கள்.


4. நீங்கள் வலதுபுறம் திரும்பும் போது எதிரே வருகின்ற வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் குறித்து கவனமுடன் இருங்கள்.

5. வலதுபுறம் திரும்பும் மற்ற வாகனங்களுக்கு உங்கள் வலதுபுறத்தில் உங்களை முந்திச்செல்ல இடமளிக்க, பரந்த அரைவிட்டத்தைப் பயன்படுத்தவும்.

6. வலதுபுறம் திரும்பும்போது சாலையின் இடக்கோடிக்கு நகர்ந்து செல்லவும்.

## e) போக்குவரத்து விளக்கு கடப்பிடத்தைக் கொண்ட சாலை சந்திப்பில் வலதுபுறம் திரும்புதல் - பாதசாரிகளுக்கான கடப்பிடங்களைப் பயன்படுத்துதல்

சாலைச் சந்திப்பைக் கடப்பது உங்களுக்கு வசதியாக இல்லை என்றால், அதற்குப் பதிலாக பாதசாரிகளுக்கான கடப்பிடத்தைப் பயன்படுத்த வேண்டும்.




1. நிறுத்துவதற்கான கை சைகையைக் காண்பிக்கவும். உங்களுக்குப் பின்னால் வாகனங்கள் இருக்கின்றனவா என்று கவனமுடன் பார்க்கவும்.


2. உங்கள் மின்- மிதிவண்டியை சாலை ஓரத்தில் நிறுத்தி, அதிலிருந்து இறங்கி நடைபாதைக்குள் தள்ளிக்கொண்டு நடந்து செல்லுங்கள். அப்பாதை மிதிவண்டி பாதையாக இல்லாவிட்டால், மின்-மிதிவண்டியைத் தொடர்ந்து தள்ளிக்கொண்டு நடந்து செல்லுங்கள்.

3. பாதசாரிகளுக்கான கடப்பிட விளக்குக்குக் கீழ்ப்படியுங்கள். நடை வேகத்தில் இடதுபுறமாகக் கடந்து, பாதசாரிகளுக்கு வழிவிடுங்கள்.

4. உங்கள் மின்-மிதிவண்டியை மீண்டும் சாலையில் இறக்கி, வழித்தடத்தின் இடதுபுறத்திற்குத் தள்ளிக்கொண்டு நடந்து செல்லவும். சாலையில் இறங்குவதற்கு முன்னர் வாகனங்கள் ஏதேனும் வருகின்றதா என்பதைக் கவனமுடன் பார்க்கவும்.

5. பின்னாலிருந்து ஏதேனும் வாகனங்கள் நெருங்கி வருகின்றனவா என்பதைக் கவனித்த பிறகு, பாதுகாப்பாக இருந்தால் மட்டுமே அங்கிருந்து நகரவும்.

## f) சாலை சந்திப்பில் U-வளைவு செய்தல்




1. நீங்கள் வலதுபுறம் நகர்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு, வலதுபுறம் திரும்புவதற்கான கை சைகையைக் காண்பிக்கவும்.

2. சாலைச் சந்திப்பை நெருங்கும் போது, பின்னால் வாகனங்கள் உள்ளதா என்பதைக் கவனித்த பிறகு, **வலதுபுறம் திரும்புகின்ற** வழித்தடத்தின் வலக்கோடிக்குச் செல்லுங்கள். வழித்தடத்தின் **வலது புறத்திலேயே** இருங்கள். ஏதேனும் கார் திரும்பும்போது நீங்கள் அதன் பக்கவாட்டுப் பகுதியில் இருந்தால் அது உங்கள் மீது மோதக்கூடும் என்பதால், நீங்கள் அதன் முன்னால் இருக்கும் வகையில் உங்களை நிலைநிறுத்துங்கள்.

3. போக்குவரத்து விதிகளுக்குக் கீழ்ப்படியுங்கள். வாகனங்களுக்கான பச்சை நிற விளக்குகள் எரியத் தொடங்கும் போது மட்டுமே வலதுபுறம் திரும்புங்கள்.

4. வலதுபுறம் திரும்பும் போது எதிரே வருகின்ற வாகனங்கள் குறித்து கவனமுடன் இருங்கள். பாதுகாப்பாக இருக்கும் போது மட்டுமே U-வளைவை மேற்கொள்ளுங்கள்.

5a சாலையின் இடதுபுறத்திற்கு நகர்ந்து U-வளைவை நிறைவு செய்யுங்கள்.

5b உங்களுடன் சேர்ந்து வேறு வாகனங்களும் U-வளைவு செய்தால், சாலையின் **வலதுபுறத்தில்** U-வளைவு செய்யுங்கள். உங்களுக்குப் பின்னால் வாகனங்கள் வருகின்றனவா என்பதைக் கவனித்த பின்னர் சாலையின் இடதுபுறத்திற்குச் செல்லுங்கள்.


## g) வாகனங்களின் பார்வையில் படாத இடங்கள்

- எல்லா வாகனங்களுக்கும் பார்வையில் படாத இடங்கள் இருக்கும். ஓட்டுநர் உங்களைக் கண்ணாடிகள் வழியாகப் பார்க்க முடியாத இடங்களை இது குறிக்கிறது. ஏதேனும் வாகனத்தைப் பின்னாலிருந்து அணுகும் போது எச்சரிக்கையாக இருங்கள்.
- குறிப்பாக, கனரக வாகனங்களுக்குப் பார்வையில் படாத பகுதிகள் அதிகமாக இருக்கும்.
- ஓட்டுநரின் முகத்தை அவரது பக்கவாட்டுக் கண்ணாடியில் உங்களால் பார்க்க முடியாவிட்டால், அந்த ஓட்டுநராலும் உங்களைப் பார்க்க முடியாது.



- கனரக வாகனத்தை முந்திச்செல்ல முயற்சிக்காதீர்கள். அதற்குப் பின்னால், சாலையின் இடதுபுறத்தில் இருங்கள்.

## h) நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களைக் கடந்துசெல்லுதல்





- நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனத்திற்கும் ஓரக்கல்லுக்கும் இடையே புகுந்து செல்லாதீர்கள். வாகனத்தின் கதவுகள் திறக்கப்படும் போது நீங்கள் அதில் மோதக்கூடும்.

- நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களைச் சுற்றி வளைந்து நெளிந்து ஓட்டக் கூடாது.

- வாகனத்தின் கதவுகள் திறக்கப்படும் போது அதில் மோதுவதைத் தவிர்க்க, நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களிலிருந்து **குறைந்தபட்சம்** 1.5 **மீட்டர் தொலைவு தள்ளி** இருங்கள்.

## i) பேருந்து வழித்தடம் இல்லாத பேருந்து நிறுத்தங்களைக் கடந்து செல்லுதல்




1 வேகத்தைக் குறைத்து, பேருந்து புறப்படப் போகிறதா என்பதை மதிப்பிடுங்கள். பேருந்து புறப்படப் போவதற்கான சமிக்ஞைகள் அல்லது அறிகுறிகளைக் கவனியுங்கள்.

2a **பேருந்து புறப்படுகிறது அல்லது புறப்படப் போகிறது என்றால்:**

- வேகத்தைக் குறைத்து, நிறுத்துவதற்குத் தயாராகுங்கள். இடதுபுறமாகவே சென்று, பேருந்துக்குப் பின்னால் பாதுகாப்பான தூரத்தை நிலைநாட்டுங்கள்.
- நிறுத்தப்பட்டிருக்கும் பேருந்துக்கும் ஓரக்கல்லுக்கும் இடையே புகுந்து செல்லாதீர்கள்.
- பேருந்து புறப்படும் வரை காத்திருங்கள். பேருந்துகள் உங்கள் வலதுபுறமாக முந்திச்செல்ல வழிவிடுங்கள்.
- முந்திச்செல்லும் பேருந்துகள் ஏதும் இல்லாத போது மட்டுமே நகருங்கள் அல்லது பின்னால் உள்ள பேருந்து ஓட்டுநர் நீங்கள் செல்லலாம் என்று சுட்டிக்காட்டினால் மட்டுமே நகருங்கள்.

2b **பேருந்து நகரவில்லை என்றால்:**

- நீங்கள் முந்திச் செல்வதற்காக வலதுபுறம் நகர்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு, வலதுபுறமாக திரும்புவதற்கான கை சைகையைக் காண்பிக்கவும்.


3 உங்களுக்கு பின்னால் இருந்து ஏதேனும் வாகனங்கள் நெருங்குகின்றனவா என்று பாருங்கள். பேருந்தின் வலதுபுறமாக முந்திச்செல்வது பாதுகாப்பாக இருந்தால் மட்டுமே அவ்வாறு செய்யுங்கள்.

- முந்திச்செல்லும்போது, பேருந்து புறப்படப் போகிறதா என்பதைக் கவனியுங்கள்.

- பேருந்து நகரவில்லை என்றால், முந்திச் செல்லுங்கள். முந்திச்சென்ற பிறகு, இடதுபுறமாகத் திரும்புவதற்குக் கை சைகை காண்பித்து, சாலையின் இடதுபுறத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள்.

- நீங்கள் முந்திச்செல்லும்போது பேருந்து நகர்ந்தால், வேகத்தைக் குறைத்து, **பேருந்து முதலில் நகர்வதற்கு வழிவிடுங்கள்**. இடதுபுறம் திரும்புவதற்கான கை சைகையைக் காண்பித்து, சாலையின் இடதுபுறத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள்

## j) பேருந்து வழித்தடம் உள்ள பேருந்து நிறுத்தங்களைக் கடந்து செல்லுதல்





1 வேகத்தைக் குறைத்து, பேருந்து புறப்படப் போகிறதா என்பதை மதிப்பிடுங்கள். பேருந்து புறப்படப் போவதற்கான சமிக்ஞைகள் அல்லது அறிகுறிகளைக் கவனியுங்கள். பேருந்து வழித்தடத்திற்குள் நுழைய வேண்டாம்.

2 **பேருந்து புறப்படுகிறது அல்லது புறப்படப் போகிறது என்றால்:**

- வேகத்தைக் குறைத்து, நிறுத்துவதற்குத் தயாராகுங்கள். பேருந்து வழித்தடத்தின் வெளியேறும் வழியில் இருந்து ஒரு பாதுகாப்பான தூரத்திற்கு அப்பால் நிறுத்துங்கள்.
- பேருந்து ஓட்டுநரால் உங்களைப் பார்க்க முடியாதிருக்கலாம் என்பதால், வழித்தடத்திலிருந்து பேருந்து வெளியேற வழிவிடுங்கள். வழித்தடத்தில் இருந்து பேருந்து வெளியேறிய பிறகே நகருங்கள்.

**பேருந்து நகரவில்லை என்றால்:** பேருந்தை முந்திச் செல்வதைத் தொடருங்கள்.

**k)** வட்டச்சுற்று வழியாகத் திறம்பட ஓட்டுதல்




வட்டச்சுற்று வழியில் ஓட்ட உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால், **சாதனத்தில் இருந்து இறங்கி, சாலையில் இருந்து விலகுங்கள்**. நடைபாதை வழியாக வட்டச்சுற்று வழியைக் கடந்து செல்லுங்கள்.

1. வட்டச்சுற்று வழியை நெருங்கும் போது வேகத்தைக் குறைத்து, உங்கள் வலதுபுறத்தில் உள்ள வாகனங்களுக்கு வழிவிடுங்கள்.

2. **1வது வெளியேறும் வாயிலில் வெளியேறுவதாக இருந்தால்**, இடக்கோடி தடத்தில் வட்டச்சுற்று வழிக்குள் நுழையுங்கள். சாலையின் இடதுபுறமாகவே சென்று, பொருத்தமான முறையில் வெளியேறவும்.

2 2 2 **2வது, 3வது வாயிலில் வெளியேறுவதாக இருந்தால் அல்லது வட்டச்சுற்று வழியில் U-வளைவு செய்வதாக இருந்தால், மிதிவண்டி ஓட்டுபவர்களின் பாதுகாப்புக்காக, இடக்கோடி வழித்தடத்திற்குள் நுழையுங்கள்.** வழித்தடத்தின் நடுவில் உங்களை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்.

3 3 3 வெளியேறுவதற்கு, இடதுபுறம் திரும்புவதற்கான கை சைகையை முன்னதாகவே காண்பித்து, அதன்பிறகு **வெளியேறும் வாயிலை நெருங்கும் போது வழித்தடத்தில் இடதுபுறத்திற்குச் செல்லுங்கள்.**

பொருத்தமான முறையில் வெளியேறுங்கள்.

## 3.6 சிறந்த நடைமுறைகள் மற்றும் நடத்தை விதிகள் - மிதிவண்டி பாதைகள் மற்றும் சாலைகளில் மின்-மிதிவண்டியை ஓட்டுதல்

**சாதனத்தைப் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் ஓட்டுவதற்கான 3 உதவிக்குறிப்புகள்**

### உதவிக்குறிப்பு 1: எச்சரிக்கையாக இருங்கள்

- எச்சரிக்கையாக இருந்து, கவனச்சிதறல்களைக் குறையுங்கள். உங்கள் கைபேசியைப் பார்க்க வேண்டாம்.
- ஆபத்து ஏற்படக்கூடிய சாத்தியங்களைக் குறைக்க, உங்களைச் சுற்றியிருப்பவற்றைக் கவனித்திடுங்கள். இதன்வழி நீங்கள் முன்கூட்டியே தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.
- நீங்கள் சோர்வாக இருந்தால் அல்லது மது அருந்தியிருந்தால் உங்கள் செயல்பாடுகள் மந்தமாக இருக்கக்கூடும் என்பதால் சாதனத்தை ஓட்ட வேண்டாம்.

## உதவிக்குறிப்பு 2: உங்கள் வேகத்தை உங்கள் சுற்றுப்புறத்திற்கு ஏற்ப சரிசெய்து கொள்ளுங்கள்

- மிதிவண்டி பாதைகளில் வேக வரம்பு மணிக்கு 25 கிமீ ஆகும். ஆனால் உங்கள் சுற்றுப்புறத்திற்கு ஏற்ப, குறிப்பாக பாதசாரிகள் இருக்கும்போது, உங்கள் வேகத்தைச் சரிசெய்துகொள்ள வேண்டும். கடப்பிடங்களில், மற்ற ஓட்டுநர்கள் எதிர்வினையாற்றவும், நிறுத்தவும் நேரம் வழங்குவதற்கு உங்கள் சாதனத்தின் வேகத்தைக் குறைத்து, நிறுத்துங்கள்.

- பேருந்து நிறுத்தங்கள் அல்லது கடப்பிடங்கள் போன்ற நெரிசலான பகுதிகளில் சாதனத்தின் வேகத்தைக் குறையுங்கள் அல்லது இறங்கி தள்ளிக்கொண்டு நடந்து செல்லுங்கள்.

- சாலையின் குறுக்குச் சந்திப்புகளை அல்லது பாதையை மறைக்கும் வளைவுகளை நெருங்கும் போது, வேகத்தைக் குறைத்து, சாதனத்தை நிறுத்துவதற்குத் தயாராகுங்கள்.

## உதவிக்குறிப்பு 3: வழிவிட்டு, கனிவுடன் நடந்து கொள்ளுங்கள்

- பகிரப்படும் பாதைகளில் மேற்கொள்ளும் பயணங்கள் பாதுகாப்பாகவும் இனிமையாகவும் அமைவதை உறுதி செய்வதில் அனைவருக்கும் பங்குள்ளது.

- பாதசாரிகள் போன்ற மெதுவாக நடப்பவர்களையும் எளிதில் பாதிக்கப்படும் சூழ்நிலையில் உள்ளவர்களையும் கவனித்து வழிவிடுங்கள்..

- பிற பாதைப் பயனர்கள் அல்லது சாலையில் உள்ள வாகனங்களுக்கு இடையே வளைந்து நெளிந்து செல்லாதீர்கள்.

- கனிவுடன் நடந்து கொள்ளுங்கள். கடந்து செல்லும் போது அல்லது முந்தும்போது உங்கள் சாதனத்தின் மணியை (அல்லது பிற எச்சரிக்கை சாதனம்) பயன்படுத்தி, நீங்கள் பாதையில் வருவது குறித்து மற்றவர்களை மெல்ல எச்சரிக்கவும். அதை அதிகளவில் பயன்படுத்தக் கூடாது.

- மற்றவர்களை முந்தும் போது தவிர மற்ற சூழல்களில் அவர்கள் உங்களைக் கடந்து செல்வதை அனுமதிக்க இடதுபுறமாகவே செல்லுங்கள்.

- மற்றவர்களிடமிருந்து பாதுகாப்பான தூர இடைவெளியை கடைப்பிடியுங்கள். மிக நெருக்கமாக உரசுவது போல செல்லக் கூடாது. முன்னால் இருப்பவர் திடீரென்று நிறுத்தினால், உங்களால் உரிய நேரத்தில் நிறுத்த முடியாமல் போகலாம்.

- சாலையில் செல்லும்போது, உங்கள் பாதுகாப்புக்காக மற்ற வாகனங்களிலிருந்து பாதுகாப்பான தூரத்தை நிலைநாட்டுங்கள்.

## 3.7 உத்தேச ஆபத்துகளை அடையாளம் காணுதல்

a) உத்தேச ஆபத்துகளைக் கவனித்து, எதிர்பாராததை எதிர்பாருங்கள். மற்றவர்கள் சரியான நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருத வேண்டாம். நீங்கள் எதிர்வினை மேற்கொள்ள அவகாசம் இருக்கும் வகையில் வேகத்தைக் குறைத்திடுங்கள். எடுத்துக்காட்டுகள்:

- **பிற பாதைப் பயனர்கள்.** அவர்கள் உங்கள் வழியிலிருந்து விலகிச்செல்லாமல் இருக்கலாம் அல்லது உங்கள் இருப்பை நீங்கள் எச்சரித்த பிறகும் அவர்கள் திடீரென திசையை மாற்றி உங்களுக்கு முன்னால் செல்லலாம்.

- **பிற சாலைப் பயனர்கள்**. ஓட்டுநர்களால் உங்களைப் பார்க்க முடியும் அல்லது உங்களுக்கு வழிவிடுவார்கள் என்று நினைக்கவேண்டாம்.

- **அனைத்து சாலைக் கடப்பிடங்களிலும் எதிர்வரும் வாகனங்கள்.** எல்லா வாகனங்களும் கடப்பிடங்களில் நிற்பதில்லை. எதிர்வரும் வாகனங்களைக் கவனிக்க எப்போதும் கடப்பிடங்களில் நிறுத்துங்கள். முடிந்தவரை சாலையைக் கடப்பதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் கடப்பிடங்களில் கடக்கவும்.

- **உங்கள் பார்வை தடைப்படக்கூடிய**, பார்வையை மறைக்கக்கூடிய இடங்களில் கவனம் செலுத்துங்கள் (எ.கா. ஒரு வளைவைச் சுற்றி, மரங்கள் அல்லது கட்டிடங்கள் போன்ற இடையூறுகள்). பிற பாதைப் பயனர்கள் உங்கள் பார்வையில் படாத இடத்திலிருந்து வெளிப்படலாம் என்பதால் சாதனத்தின் வேகத்தைக் குறைத்து, நிறுத்தத் தயாராகுங்கள்.





- சாலையைக் கடக்கும்போது இருக்கும் **இடையூறுகள்** அல்லது **ஓரக்கல்**, நீங்கள் சாதனத்தின் கட்டுப்பாட்டை இழக்கச் செய்யலாம்.

b) **உங்கள் சாதனம் ஓடும் சூழ்நிலைகளை உணர்ந்து செயல்படுங்கள்.**

- பலத்த மழையில் சாதனத்தை ஓட்டும்போது உங்கள் சாதனத்தின் மின்சாரப் பாகங்களும் மின்கலனும் பாதிக்கப்படலாம். பிரேக் பிடிக்கும் தூரம் (முழுமையாக நிறுத்துவதற்குத் தேவைப்படும் தூரம்) அதிகரிக்கும். எனவே, சாதனத்தைப் பாதுகாப்பாகக் கையாளும் வகையில் வேகத்தைக் குறைக்கவும்.

- பார்வை நிலை மோசமாக இருக்கும்போது (எ.கா. இரவில் அல்லது மழையில்), உங்கள் சாதனத்தின் விளக்குகளை எரியச் செய்யவும். சாதனத்தைப் பாதுகாப்பாகக் கையாளும் வகையில் வேகத்தைக் குறைக்கவும்.

- சாதனத்திலுள்ள கருவிகள் பழுதடையும் அபாயத்தைக் குறைக்க, பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர் அவற்றைச் சரிபாருங்கள்.

## 3.8 விபத்து நிகழும் போது என்ன செய்ய வேண்டும்

- சாதனத்தை நிறுத்தி உதவி வழங்குங்கள்.

- யாருக்கேனும் உடனடி மருத்துவ கவனிப்புத் தேவைப்பட்டால் அவசர மருத்துவ வாகனத்தை அழைக்கவும்.

- **சூழ்நிலை பாதுகாப்பாக இருக்கும்போது மட்டுமே** விபத்துக்கான ஆதாரங்களைச் சேகரிக்கவும் (விபத்து நடந்த இடம், சம்பந்தப்பட்ட வாகனங்கள், ஏற்பட்ட சேதங்கள் ஆகியவற்றைப் புகைப்படம்/காணொளி எடுக்கவும்).

- தடங்கல் ஏற்படுத்துவதைத் தவிர்க்க சாதனத்தை அப்புறப்படுத்தவும் (ஆனால் தேவையான அனைத்து ஆதாரங்களையும் நீங்கள் சேகரித்த பின்னர்).

- சம்பந்தப்பட்ட தரப்பினருடன் விவரங்களைப் பரிமாறிக் கொள்ளவும் [பெயர், தொடர்பு எண், வீட்டு முகவரி மற்றும் காப்புறுதித் தகவல்கள் (ஏதேனும் இருந்தால்)].

- பொதுப் பாதைகளில் ஏற்படும் விபத்துகளுக்கு, விபத்து நேரும்போது காவல்துறை அதிகாரி, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது பொதுப் பாதை காப்பாளர் யாரும் இல்லை என்றால், விபத்து குறித்து போலீசாரிடம் புகாரளிக்கவும்.

- சாதனத்தை நிறுத்த, உதவி வழங்க, விவரங்களைப் பரிமாறிக்கொள்ள அல்லது விபத்து குறித்து அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கத் தவறுவது குற்றமாகும்.

## விபத்து நிகழும் போது என்ன செய்ய வேண்டும்



# பின்னிணைப்பு A: உந்து நடமாட்டம் தொடர்பான பொதுவான குற்றங்களுக்கான அதிகபட்ச தண்டனைகள்

உந்து நடமாட்டம் தொடர்பான சில குற்றங்களுக்கான அதிகபட்ச அபராதங்கள், சிறைத்தண்டனை ஆகியவற்றின் முழுமையற்ற பட்டியல் இது.

| நடவடிக்கைகள் | முதல் குற்றம் | அடுத்தடுத்த குற்றங்கள் |
|---|---|---|
| **ஓட்டுதல் தொடர்பான நடத்தை**<br>• பாதையில் சாதனத்தை ஓட்டும்போது மொபைல் தொடர்பு சாதனத்தைப் பயன்படுத்துதல்<br>• பொருத்தமான விளக்குகள் இல்லாமல் இரவில் மிதிவண்டி, PMD அல்லது மின்-மிதிவண்டி ஓட்டுதல்<br>• கடப்பிடங்களில் நிறுத்தவும் கவனிக்கவும் தவறுதல்<br>• மிதிவண்டி ஓட்டுநர் அல்லது மின்-மிதிவண்டி சாலைகளில் கட்டி இழுத்தல் அல்லது கட்டி இழுக்கப்படுதல்<br>• சாலைகளில் போக்குவரத்து ஓட்டத்திற்கு எதிராக சாதனத்தை ஓட்டுதல்<br>• சாலைகளில் தலைக்கவசங்கள் இல்லாமல் ஓட்டுதல் (பயணிகள் உட்பட) | $1,000 மற்றும்/அல்லது 3 மாதங்கள் | $2,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் |

## பின்னிணைப்பு A

| நடவடிக்கைகள் | முதல் குற்றம் | அடுத்தடுத்த குற்றங்கள் |
|---|---|---|
| • சாலையில் வாகனம் ஓட்டும்போது மொபைல் தொடர்பு சாதனத்தைப் பயன்படுத்துதல் | $1,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் | $2,000 மற்றும்/அல்லது 12 மாதங்கள் |
| • பொதுப் பாதைகளில் வேகமாக ஓட்டுதல் | $2,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் | $5,000 மற்றும்/அல்லது 12 மாதங்கள் |
| • பொதுப் பாதைகளில் விபத்து நேரும்போது ஓட்டுநரின் கடமைகளைச் செய்யத் தவறுதல் | $3,000 மற்றும்/அல்லது 12 மாதங்கள் | $5,000 மற்றும்/அல்லது 2 ஆண்டுகள் |
| • பொதுப் பாதைகளில் ஆபத்தான அல்லது பொறுப்பற்ற முறையில் ஓட்டுதல் | $10,000 மற்றும்/அல்லது 12 மாதங்கள் | |
| **தடை செய்யப்பட்ட பகுதிகளில் ஓட்டுதல்**<br>• மிதிவண்டி/மின்-சைக்கிளை விரைவுச்சாலைகள், விரைவுச்சாலையின் சுரங்கச்சாலைகள் அல்லது சாலையின் சுரங்கச் சாலைகளில் ஓட்டுதல் | $1,000 மற்றும்/அல்லது 3 மாதங்கள் | $2,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் |
| • "ஓட்டிச் செல்லக்கூடாது" என்ற குறியீடுகள் இருக்கும் பகுதிகளில் ஓட்டுதல்<br>• மோட்டார் பொருத்தப்பட்ட PMD அல்லது மின்-மிதிவண்டியை நடைபாதையில் ஓட்டுதல்<br>• PMD அல்லது மின்-மிதிவண்டியைச் சாலைகளில் ஓட்டுதல் | $2,000 மற்றும்/அல்லது 3 மாதங்கள் | $5,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் |

| நடவடிக்கைகள் | முதல் குற்றம் | அடுத்தடுத்த குற்றங்கள் |
|---|---|---|
| **சாதன வரையறைகள் மற்றும் உரிமைத்துவம்**<br>• பதிவு முத்திரையை அல்லது அடையாள முத்திரையை காட்சிப்படுத்தாமல் ஓட்டுதல்<br>• மின்-ஸ்கூட்டரை கால அட்டவணைப்படி சோதனைக்கு அனுப்பத் தவறுதல் | $1,000 மற்றும்/அல்லது 3 மாதங்கள் | $2,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் |
| • பதிவு செய்யப்படாத மின்-ஸ்கூட்டரை பொதுப் பாதைகளில் ஓட்டுதல் அல்லது ஓட்ட அனுமதித்தல்<br>• பதிவு செய்யப்படாத மின்-மிதிவண்டியை வைத்திருப்பது | $2,000 மற்றும்/அல்லது 3 மாதங்கள் | $5,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் |
| • பதிவு செய்யப்படாத மின்-மிதிவண்டியை மிதிவண்டி பாதைகளில் ஓட்டுதல் | $5,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் | $10,000 மற்றும்/அல்லது 12 மாதங்கள் |
| • வரையறைகளுக்கு உடன்படாத சாதனத்தைப் பொதுப் பாதையில் ஓட்டுதல் | $10,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் | $20,000 மற்றும்/அல்லது 12 மாதங்கள் |
| • உந்து நடமாட்டச் சாதனத்தில், வரையறைக்கு உடன்படாத சட்டவிரோத மாற்றங்களைச் செய்தல் | $20,000 மற்றும்/அல்லது 2 ஆண்டுகள் | $40,000 மற்றும்/அல்லது 4 ஆண்டுகள் |

| நடவடிக்கைகள் | முதல் குற்றம் | அடுத்தடுத்த குற்றங்கள் |
|---|---|---|
| **பாரங்கள் மற்றும் பயணிகள்**<br>• மிதிவண்டியில்/ மின்-மிதிவண்டியில் முறையற்ற வகையில் பிணைக்கப்பட்ட/ பெரிய அளவிலான பாரங்கள் மிதிவண்டியில்/ மின்-மிதிவண்டியில் அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிச் செல்லுதல்<br>• மிதிவண்டியில்/ மின்-மிதிவண்டியில் முறையான இருக்கைகளின்றி பயணிகளை ஏற்றிச் செல்லுதல்<br>• மின்-மிதிவண்டியில் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட வயதிற்குக் குறைவான பயணியை ஏற்றிச் செல்லுதல் | $1,000 மற்றும்/அல்லது 3 மாதங்கள் | $2,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் |
| **சட்டப்படி அனுமதிக்கப்பட்ட வயதிற்குக் குறைவானவர்கள் ஓட்டுதல்**<br>• சட்டப்படி அனுமதிக்கப்பட்ட வயதிற்குக் குறைவானவர்கள் மோட்டார் பொருத்தப்பட்ட PMD அல்லது மின்-மிதிவண்டியை ஓட்டுதல்<br>• சட்டப்படி அனுமதிக்கப்பட்ட வயதிற்குக் குறைவானவர்கள் மோட்டார் பொருத்தப்பட்ட PMD-ஐ ஓட்டுவதற்கு வசதி ஏற்படுத்தித் தருதல்<br>• சட்டப்படி அனுமதிக்கப்பட்ட வயதிற்குக் குறைவானவர் மின்-ஸ்கூட்டர் ஓட்டுவதை முறையாக மேற்பார்வை செய்யத் தவறுதல் | $1,000 மற்றும்/அல்லது 3 மாதங்கள் | $2,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் |

| நடவடிக்கைகள் | முதல் குற்றம் | அடுத்தடுத்த குற்றங்கள் |
|---|---|---|
| **எழுத்துப்பூர்வ தேர்வுச் சான்றிதழ்***<br>• எழுத்துப்பூர்வத் தேர்வுச் சான்றிதழ் இல்லாமல் பொதுப் பாதையில் மின்-ஸ்கூட்டர்/ மின்-மிதிவண்டி ஓட்டுதல் அல்லது ஓட்டச் செய்தல்<br>• எழுத்துப்பூர்வத் தேர்வுச் சான்றிதழ் இல்லாமல் சாலைகளில் மின்-மிதிவண்டியை ஓட்டுதல் அல்லது ஓட்டச் செய்தல் | $2,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் | $5,000 மற்றும்/அல்லது 12 மாதங்கள் |
| • எழுத்துப்பூர்வத் தேர்வுச் சான்றிதழை சட்டவிரோதமான வகையில் பயன்படுத்துதல் | $5,000 மற்றும்/அல்லது 12 மாதங்கள் | |
| **மற்றவை**<br>• பொதுப் பாதையை மறைத்தல் (எ.கா. கண்டபடி நிறுத்தி வைத்தல்) | $2,000 | |
| • பொதுப் பாதைகளில் அமலாக்க அதிகாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்துதல்<br>• பொய்யான தகவல்களை வழங்குதல் | $5,000 மற்றும்/அல்லது 12 மாதங்கள் | |

* எழுத்துப்பூர்வத் தேர்வு அமலாக்கப்பட்டவுடன் மட்டுமே பொருந்தும்.